

# திறவுகோல்

கார்த்திகை 2049
மாத இதழ்

செண்பக வனம்

சாதியை சாகடிப்போம்

---

தமிழன் கட்டி ஆண்ட யாழி

---

வெளிநாட்டு வாழ்க்கை...

---

மன்னை என்கின்ற மன்னாற்குடியும்
சிங்கை என்கின்ற சிங்கப்பூரும் ...

வெளியீடு
மன்னையின் மைந்தர்கள் அமைப்பு

மண்ணின் மாற்றத்தை நோக்கி

மாற்றங்களை பிறரிடம் எதிர்பார்க்காமல் எம்மிடம் இருந்து ஆரம்பிக்க வேண்டும் என எண்ணிய பல எளிய மக்கள் ஒன்று சேர்ந்து டிசம்பர் 26, 2014ம் தேதி முகநூலில் மன்னையின் மைந்தர்கள் குழு ஆரம்பித்து இன்று 4966 முகநூல் நட்புகளுடன் தொடர்ந்து பயணிக்கிறது.

இணையத்தில் மட்டும் இல்லாது களத்திலும் பல செயல்களை வெற்றிகரமாக செய்து வருவது குறிப்பிடத்தக்கது.

குறிப்பாக நம்மாழ்வார் ஏரியை தூர்வாரி மீட்டெடுத்தனர், நம்மாழ்வார் பூங்கா, மீத்தேன் திட்ட எதிர்ப்பு போராட்டங்கள், உயர்திரு. சகாயம் (இ.ஆ.ப.) அவர்களை கொண்டு நமது வாக்கு! நமது உரிமை!! தேர்தல் கருத்தரங்கம், கருவேல மரம் அழிப்பு (மன்னார்குடி தொடர்வண்டி நிலையம் அருகில்), நெகிழி அழிப்பிற்கான விழிப்புணர்வு, இரத்த தான முகாம், கடலூர் வெள்ள நிவாரண உதவி, பூமியை காப்போம் கருத்தரங்கம் என பல உறுப்பினர்களின் ஒத்துழைப்புடன் சிறப்பாக நடைபெற்றது. தற்பொழுது அரிச்சபுரம் ஊராட்சி ஒன்றிய நடுநிலைப்பள்ளியின் அடிப்படை வசதிகளை சரி செய்து கொண்டு வருகிறார்கள்.

நோக்கம்

மக்களின் வாழ்வியலை மேம்படுத்துவதையும், இயற்கையை பேணி காப்பதையும் முதன்மையாக கொண்டு அதற்கு தேவையான விழிப்புணர்வை நாங்களும் பெற்று அதனை மக்களுக்கும் கொண்டு செல்வதே இவ்வியக்கத்தின் நோக்கம்.

# சாதியை சாகடிப்போம்


மணிபாரதி தங்க சுந்தர்

சாதிமத பேதங்கள் மூட வழக்கங்கள்
தாங்கி நடைபெற்றுவரும் சண்டை யுலகிதனை
ஊதையினில் துரும்புபோல் அலைக்கழிப்போம்: பின்னர்
ஒழித்திடுவோம்; புதியதோர் உலகம் செய்வோம்!
பேதமிலா அறிவுடைய அவ்வுலகத்திற்குப்
பேசுசுய மரியாதை உலகு எனப் பேர்வைப்போம்!
ஈதேகாண்! சமூகமே, யாம் சொன்னவழியில்
ஏறுநீ! ஏறுநீ! ஏறுநீ!! ஏறே.

- பாரதிதாசன்...

காலசக்கரத்தின் ஓட்டத்தில் எத்தனை மாற்றங்கள் வந்தாலும் காலமெல்லாம் நம்மை தொடரும் பிணி சாதி இந்த சாதி கட்டமைப்பால் எத்தனை துயரம் மனித சமூகத்திற்கு நடந்து கொண்டு இருக்கிறது. இருப்பினும் எத்தனை இழப்புகள் வந்தாலும் இதை வேண்டாம் என ஏற்க பலர் மனம் தயாராகவில்லை. காலை முதல் மாலை வரை நாம் உபயோகிக்கும் அத்தனை பொருட்களிலும் அனைவரின் உழைப்பும் இருக்கிறது. அதை யாரும் புறக்கணிப்பது இல்லை ஆனால் சில விடயங்களுக்கு சாதி முக்கியம் எனும் மனோநிலை இன்றுவரை இருக்கிறது. நம்மில் 10 சதவீதம் பேர் கூட சாதி போராளியாக இல்லை ஆனால் 100 சதவீதம் பேரும் ஏதோ ஒரு வகையில் சாதிக்கு ஏமாளியாக இருக்கிறோம் என்பதே நிதர்சனமான உண்மை...

முதல் நாள் பள்ளியில் கட்டாயம் சாதி சான்றிதழ் பெற்றுக் கொண்டு மறு நாள் ‘‘சாதிகள் இல்லையடி பாப்பா’’ என கற்பிக்கப்படுகிறது. சிறுவயதிலே சாதி சான்றிதழ் கட்டாயம் என அவர்கள் மனதில் சாதியை வளர்த்த பிறகு பின் சாதி ஒழிப்பு பற்றி பேசுவது உபயோகமற்ற ஒரு விடயம். சிறுவயது முதல் பாசமாக வளர்த்த தன் பிள்ளைகளின் ஆசையை விட சாதி முக்கியம் என எத்தனை ஆணவப்படுகொலை நடத்தப்படுகிறது. சாதியை எதிப்பவர்கள் ஒழிந்து போகிறார்கள் ஆனால் சாதி ஒருபோதும் ஒழியவில்லை.

அப்படி என்ன இந்த சாதி மீது மோகம்... இந்த சாதி எதற்காக..? எப்போது..? யாரால் உருவாக்கப்பட்டது என வரலாறு தெரிந்து கொள்ளும் முன் ஒன்றை மட்டும் மனதில் ஏற்றிக் கொள்ளுங்கள் ‘‘மாட்டு சாணியால் கூட பயன் உண்டு ஆனால் மனிதனுக்கும் சாதியால் எந்த பயனுமில்லை’’.

முதலில் ஒன்றை தெளிவாக புரிந்துக்கொள்ளுங்கள்... கி.பி 8 ம் நூற்றாண்டில் மனு என்கின்ற நபரால் மனுதர்ம சாத்திரம் என்ற ஒரு நூல் இயற்றப்பட்டது. அப்போது மௌரிய ஆட்சியை வீழ்த்தி ஆட்சியை பிடித்திருந்த குசியபத்திர சுங்கன் என்ற

அரசனால் அரசு சட்டமாக இயற்றப்பட்டது. இது நடந்தது கர்நாடகாவில் அக்காலக்கட்டத்தில் மன்னனின் உத்தரவை மீற முடியுமா?

சாதி என்பது பிழைப்பு ரீதியாக தான் உருவாக்கப்பட்டதே தவிர பிறப்பு ரீதியாக அமைக்கப்படவில்லை என்பதை புரிந்துக்கொள்ள வேண்டும். மனுதர்ம சாத்திரத்தில் நான்கு வகை சாதியாக பிரிக்கப்பட்டது. முதலில் பிராமணர்கள். அதிகம் படித்தவர்களை தான் பிராமணர்களாக அடையாளப்படுத்தினார்கள். நம் முனிவர்கள் அனைவரும் அறிவியல் ரீதியாக பல விடயங்களை செய்ததால் அவர்களை பிராமணர்களாக அடையாளப்படுத்தினார்கள்.

இவர்களுக்கு அரசன் உட்பட அனைவரும் பெரும் மரியாதை அளித்துள்ளார்கள். இரண்டாவது சத்திரியர்கள் தன் நாட்டிற்காக உயிர் தாகம் செய்பவர்களை இவ்வாறு அடையாளப்படுத்தியுள்ளார்கள். மூன்றாவது வைசியர்கள் வணிகம் மற்றும் விவசாயம் போன்ற தொழில் செய்பவர்கள். நான்காவது சூத்திரர்கள் பிற தொழில் செய்பவர்கள். குறிப்பாக இவர்களுக்கு பிறக்கும் பிள்ளைகள் அதே சாதி அமைப்பில் தொடரமுடியாது. அவர்கள் வளர்ந்து என்ன தொழில் செய்கிறார்களோ அந்த அமைப்பில் தான் அடையாளப்படுத்தப்படுவார்கள் இது தான் சட்டமாக இயற்றப்பட்டது. தன் நாட்டிற்காக அனைவரும் எந்த அளவிற்கு பங்களிப்பு தருகிறார்கள் என்பதை அறிய உருவாக்கப்பட்டதே சாதி.

பிற்காலத்தில் இவர்களில் சிலர் தன் மகனிற்கும் என்னை போலவே மரியாதை கிடைக்க வேண்டும் என இந்த அமைப்பில் சிறுமாற்றத்தை ஏற்படுத்தியதே பிறகு சாதி பிறப்பு ரீதியாக மாற காரணம் ஆனது. இதே போல் தான் திருமண பந்தமும் முடிவு செய்யப்பட்டது. உதாரணத்திற்கு ஒரு மீனவனிற்கும் உழவு தொழில் செய்யும் ஒரு பெண்ணிற்கும் திருமணம் செய்தால் அவன் தன் வாழ்நாளை கடலில் கழிக்க வேண்டும் இவளோ நிலப்பரப்பில் கழிக்க நேரிடும். இதனால் இருவருக்கிடையே நல்லதொரு வாழ்க்கை அமைய வாய்ப்பில்லை.

இதனால் தான் தன் அமைப்பை சார்ந்தவர்களை மண முடித்தார்கள். இருப்பினும் இதை அனைவரும் கடைப்பிடிக்கவில்லை. இது கட்டாயமாக்கப்பட்டது ஆங்கிலேயர் ஆட்சியில் தான். அவர்கள் தான் சாதியை பிறப்பு ரீதியாக தீவிரமாக அங்கிகரித்தார்கள்.

அவர்கள் புதிதாக இந்த அமைப்பில் ஐந்தாவதாக தீண்டதகாதவர்கள் என ஒரு பிரிவை உருவாக்கினார்கள். இவர் அனைவருக்கும் அடிமை என அடையாளப்படுத்தியுள்ளார்கள். காலப்போக்கில் இந்த ஐந்து பிரிவில் இருந்தவர்கள் தன் பெரும்பான்மையை காட்ட தங்களுக்குள்ளே சிறு சிறு பிரிவுகளாக பிரிய தொடங்கினார்கள்.

இதை தனக்கு சாதகமாக்கி நமக்குள்ள பிரிவை உண்டாக்கி நம்மை அடிமையாக்கி ஆங்கிலேயர் ஆட்சி புரிந்தான். சாதி என்பதே நம் அடிமை அடையாளம் தான் என்பதை

அனைவரும் உணர வேண்டும்.. ஆண்டுகள் பல கடந்து பல வீரமிக்க வரலாற்றை எல்லாம் மறந்து இந்த அடிமை அடையாளத்திற்கு மட்டும் அடிமையாக இருக்கிறோம் தன்னலமற்று நம் நலனிற்காக பாடுப்பட்ட பல தேசியவாதிகளை சாதியவாதிகளாக காட்டி அவமானப்படுத்தியதே இவர்களின் சாதிப்பற்று.

இதில் பல சாதி சண்டைகள் வேறு. காரணம் தாழ்த்தப்பட்டவன், பிற்படுத்தப்பட்டவன் பாகுபாடாம். இதில் என்ன பெரிய ஏற்றத்தாழ்வு இருக்கிறது. நான் ஒருவனிடம் உன்னை எனக்கு பிடிக்கவில்லை என்று சொல்கிறேன், இன்னொருவனிடம் உன்னை எனக்கு சுத்தமாக பிடிக்கவில்லை என்கிறேன். ஆக மொத்தம் எனக்கு இரண்டு பேரையும் பிடிக்கவில்லை என்று தான் அர்த்தம்.. இதுபோல் தான் தாழ்த்தபட்டவன் என்றாலும் பிற்படுத்தப்பட்டவன் என்றாலும் நீ அடிமை என்று தான் அர்த்தம்..

காக்கை குருவிகளும் எங்கள் சாதி என உயிர்நேயத்துடன் வாழ்ந்த தமிழர்கள் இப்போது கடவுளே என்றாலும் அவன் என்ன சாதி என கேட்கும் அளவிற்கு சாதியவாதியாக மாறியது ஏன்...? இதனால் அவர்கள் அடைந்த பயன் என்ன..? ஒன்றுமில்லை.. ஒட்டுமொத்த இனமே வீழ்ச்சி அடைய சாதியே முதன்மை காரணமாக இருக்கிறது...

நம் பொருளாதார முன்னேற்றத்திலும் சாதியால் ஒருவருக்கு ஒருவர் சண்டையிட்டு வீழ்ச்சி அடைகிறோம். இதன் விளைவாக அந்நிய நிறுவனங்கள் நம் பொருளாதாரத்தை சூறையாடுகிறது... எப்படி...? ஒருவன் முடிதிருத்தகம் வைத்திருக்கிறான் ,அதே தெருவில் இன்னொருவர் மளிகை கடை நடத்துகிறார்...மளிகை கடை உரிமையாளர் இவனிடம் முடி வெட்டி கொண்டு பணத்தை அளிக்கிறார். அவன் அப்பணத்தை கொண்டு அதே மளிகை கடையில் பொருட்களை வாங்கினால் பணம் இவர்களிடையே தங்கும்.

இருவரும் பொருளாதாரத்தில் மேம்பட வாய்ப்புண்டு. இவர்கள் இருவரும் சாதி பார்த்து பழகினால் ஒருவரை ஒருவர் புறக்கணிப்பார்கள். இதை பயன்படுத்தி அந்நிய நிறுவனங்கள் நம் மத்தியில் ஊடுருவி நம் பொருளாதாரத்தை சுருட்டும். தற்போது எத்தனை அந்நிய அழகு நிலையங்கள் நம் கண்முன்னே நம் பொருளாதாரத்தை சூறையாடுகிறது என்பதே இதற்கு சான்று. இதேபோல் ஒவ்வொரு தொழிலும் நடைபெறும் எனில் நாம் இறுதிவரை பொருளாதாரத்தில் வீழ்ச்சி மட்டும் தான் அடைவோம்...

இதோடு முடியவில்லை இந்த சாதி நம் வாழ்வியலிலும் அதன் வன்முறையை காட்டுகிறது. எத்தனை காதல் கனவுகள் தினம் இரத்ததில் நனைக்கப்படுகிறது. பெற்ற பிள்ளைகளின் உயிரை பறித்து சாதிக்கு உயிர் கொடுக்கிறார்கள். இத்தனை வன்மம் ஏன்...?

இதில் பாதிக்கப்பட்டவர்களில் நானும் ஒருவன். என் உள்ளத்தில் நுழைந்து சாதித்தவளுக்கு என் இல்லத்தில் நுழைய தடைபோடுகிறது சாதீ.

உயிர் கொடுத்த உறவுகளே எங்கள் உணர்வை புரிந்து கொள்ள தவறியதால் உயிரை கொடுத்ததாவது புரியவைக்க அவள் துணிந்தும் ஆறு வருடமாய் இன்றும் எங்கள் உணர்வை யாரும் புரிந்து கொள்ளவில்லை. அவள் கண்ணீரில் நித்தம் அணைந்து கொண்டு இருக்கிறது சாதீ.

இதற்கு தீர்வு தான் என்ன ''யாதும் ஊரே யாவரும் கேளிர்'' என பாடியவரின் இனப்பிள்ளைகளே இன்று ஒருவரோடு ஒருவர் சண்டையிட்டு செத்து கொண்டு இருக்கிறோம்...


முகநூலில் ஒரு தங்கை பதிவிட்ட செய்தி ஒன்று ''நான் பறையச்சி என்று சொல்லும் போது தலைகுனிந்த நான் தமிழச்சி என உணரும் போது தலைநிமிர்கிறேன்''...

ஆம் இது தான் உண்மை... ஆங்கில, ஆரியர்கள் நமக்கு அளித்த அடிமை சாதி அடையாளத்தை அகற்றி விட்டு அன்னை தமிழினத்தின் பிள்ளைகளாக தலைநிமிர்வோம்.

நம் பெற்றோர்கள் சாதி பெருமை பேசுகிறார்கள் நாம் அதை சாகடித்து சாதித்த பெருமை பேசுவோம்.


சாதி ஒழித்தல் ஒன்று-நல்ல தமிழ் வளர்த்தல் மற்றொன்று....
- பாரதிதாசன்

- மணிபாரதி தங்க சுந்தர்



திருநிறைச்செல்வன்
கைவண்ணத்தில்....

மன்னார்குடி ரா. ராஜேஷ்



எழுதும் தொடர் முதல் அத்தியாயம் (பகுதி 8)

# செண்பக வனம்

செண்பக வனத்தில் பாம்பணி ஆற்றங்கரை சாலையில் வந்தியத்தேவன் மீது நடக்க இருந்த கொலை முயற்சி தாக்குதலை நமது கதையின் நாயகன் மாணிக்கமும் அவன் தோழன் கரியன் என்கிற புலியும் சேர்ந்து முறியடித்தனர். மறுநாள் செண்பகவனத்திற்கு வந்த ஆழ்வார்க்கடியான் மாணிக்கத்திற்கு ஏற்கனவே அறிமுகம் ஆதலால் இருவரும் மாணிக்கத்தின் வீட்டில் ஓய்வெடுத்துக் கொண்டிருக்கும் சமயத்தில் மாணிக்கம் ஒரு சிலரால் கடத்தப்படுகிறான். கடத்தப்பட்ட மாணிக்கமும் அவனின் நண்பன் கரியன் மற்றும் ஆழ்வார்க்கடியான் துணைகொண்டு வெகு சாமர்த்தியமாக தன்னை கடத்தி வந்தவர்களை கொன்றுவிட்டு ஒருவனை மட்டும் சிறைப்படுத்திக் கொண்டு தஞ்சை நோக்கி பயணமானார்கள்...

கைது செய்யப்பட்டவர் ரவிதாசன் என்பதை சோதனையின் போது தெரிந்து கொண்ட முன்னாள் மந்திரி அனைவரும் ஆழ்வார்க்கடியானும் கைதியை பாதாள சிறைக்கு மாற்றினர் கைதியிடமிருந்து கைப்பற்றப்பட்ட பொருட்களை எடுத்துவைத்து கொண்டு உறங்கா விழிகளுடன் விடியலை நோக்கி காத்திருந்தார்..... அனிருதர்.

இனி......

அதோ...

கேட்போர் காதுகள் கிழியும் வண்ணம்.
எக்காள ஒலி எழுந்தது..

''கடக்'' ''கடக்'' என்கிற சப்தத்தோடு திறந்தது கோட்டை வாயில். எல்லோரும் எக்காள

ஒலி கேட்டவுடன் எழுந்து நின்று அன்றைய பொழுதை கழிக்க ஆயதமானார்கள்.

தினமும் வந்து போகும் ஆட்களும்.

புதிதாய் வருபவர்கள் என இருவேறு வரிசையாக நீண்டது அந்த வரிசை. புதிதாய் வருபவர்கள் வரிசை கொஞ்சம் அதிகமாய் நீளதான் செய்தது.

வானமெங்கும் வண்ணக் கோலத்தை வரைந்து காட்டி வளர பார்த்தது சூரியன்..

வலைக்குள் நுழையும் பாம்பின் நீளம் குறைவது போல கோட்டை வாசலுக்குள் நுழைந்த அந்த  காத்திருந்தவர் வரிசையும் கரைந்துக் கொண்டிருந்தது. அதனிடையில் ஒரு மொட்டை மாட்டு வண்டி இரண்டு காவல் வீரர்களும் ஒரு வண்டி ஓட்டும் முதியவரும்  கோட்டை வாசலுக்குள் நுழைந்தார்கள். வரவை பதிவுசெய்யும் அதிகாரியின் அடுத்தார் போல் வந்ததும் காவலாய் வந்த வீரன் பதிவு செய்யும் அதிகாரியிடம் ''நாங்கள் சடையார் கோயில் இருந்து வருகிறோம் காவல் தலைமையகம் செல்ல வேண்டும் எங்களுக்கு உதவியாய் ஒரு வீரரும் வேண்டும் ''என்று கேட்டுக் கொண்டார்.

''ஏன் ? எதற்காக ? என்ன காரியம் ?'' என்று அந்த அதிகாரி எதிர் கேள்வி கேட்க.

''இந்தாருங்கள் இதைப் படித்துப் பாருங்கள்'' என்று தன் இடைக்கச்சையில் வைத்திருந்த ஓலையை எடுத்து அவரிடம் கொடுத்தான் காவல் வீரன்.

அதை வாங்கி படித்து பார்த்த அந்த அதிகாரி ஓலையின் அர்த்தம் புரிந்தவராய் தலையசைத்தார். தன் அருகில் நின்ற மற்றொரு வீரனை அழைத்து சடையார் கோவில் வீரர்களுக்கு உதவ பணித்தார்.

கோட்டை வாசல் வரை மூவருடன் வந்த அந்த   மொட்டை மாட்டுவண்டி இப்போது கோட்டைக்குள் நால்வருடன் பிரவேசித்தது.

கோட்டை வாசலில் இருந்து போகும் போது கடைசியாக இருந்த சத்திரம் ''வேளாண் சத்திரம்''.

சடையார் கோவில் வீரர்களுக்கு உதவியாய் வந்த கோட்டைவாசல் வீரன் அவர்களிடம்

''வீரர்களே ! எனக்கு மிகவும் பசியாக இருக்கிறது வேளாண் சத்திரத்தில் ஏதாவது வயிற்றிற்குள்  போட்டு விட்டு செல்லலாம் காவல் தலைமையகத்திற்கு சென்றால் நேரம் ஆவதே தெரியாது. அங்கே திரிகடுகம், பருத்திப் பால் போன்ற பானங்களை கிடைக்கும்'' ஆக நாம் இங்கே சற்று உணவருந்திவிட்டு செல்லலாம் என்றான்.

வண்டி ஓட்டிக் கொண்டு வந்த மூத்த வீரன் மனதிற்குள் '' இது என்னடா வம்பா போச்சு வேலை முடித்து விட்டு வீட்டிற்கு செல்லலாம் என்றால் இவன் வேற'' என்று நினைத்தவாறு ''சரி ''என்று அரை மனதுடன் சொன்னார்.

வேளாண் சத்திரத்தின் வாசலில் செண்பகவன வீரர்கள் காவல் தலைவன் தன் குதிரையின் பக்கவாட்டில் வைத்திருந்த தாம்பூல பெட்டகத்தை எடுத்து அதிலிருந்து வெற்றிலையில் சுண்ணாம்பு தடவி வாயிலிட்டுக் கொண்டு கையில் பாக்கு கொட்டையை எடுத்து அதை வெட்ட முயற்சித்து கொண்டிருந்தார். அப்போது உள்ளே பிரவேசித்த சடையர் கோவில் மாட்டு வண்டியும் அதை ஓட்டிக்கொண்டு வருபவரையும் உற்றுப் பார்த்தவர், வேகமாக அந்த கொட்டையை வெட்டி வாயில் போட்டுக்கொண்டு '' அட வாங்க அண்ணே! நீங்க சடையார் கோயில் மாரீசன் தானே!?'' என்றான். ''ஆமாம்பா நீ ! செண்பகவனத்துக்காரன் பிறைசூடன் தானே ! ?'' என்றார் மாரீசன். ''ஆமாம் அண்ணே , என்ன நீங்க இவ்வளவு தூரம் ?'' ''நீங்கள்தான் கோட்டைக்குள் வரமாட்டேன்''. என்று சொல்லிக் கொண்டிருந்த ஆளாச்சே. என்ன ? திடீரென்று கோட்டைக்குள் பிரவேசம் என்றார் பிறைசூடன் .'' அட என்னப்பா நம்ம சின்ன மன்னர் ஆதித்த கரிகாலன் இறந்த போது நான் கூறியவற்றை நீ இன்னும் மனதில் வைத்துக் கொண்டு இருக்கிறாயா ?'' ''என்ன இப்படி மெலிந்து போய் இருக்கிறாய் ?'' ''முடியெல்லாம் நரைத்து போய்விட்டது.!'' என்று மாரீசன் பிறைசூடநிடம் கேட்டார்.

'''என்னென்ன எப்போதும் ஒரே மாதிரி இருக்க நான் என்ன சடையார் கோயில் மார்க்கண்டேயன்'' ''மாரீசரா'' !?

''உங்களை பாருங்க, அப்போ பார்த்த மாதிரியே இருக்கீங்க.'' என்றார் பிறைசூடன்.

''தம்பி உன் பேச்சை ரசிக்கும் நிலைமையில் நான் இல்லை'' என்று சொன்ன மாரீசன் ''ரொம்ப முக்கியமான விஷயம் அதான் நானே வந்தேன் இந்த வீரர்களும் ரொம்ப புதிது கோட்டைக்கு வந்ததே கிடையாது ஆனா நான் ஒரு முறை வந்து இருக்கேன், அதான் நான் இவங்கள கூட்டிட்டு வந்தேன்'' என்றார்.

இப்படி இவர்களின் உரையாடல் நடந்து கொண்டிருக்க திடீரென எங்கிருந்தோ வந்த இரண்டு தெருநாய்கள் சண்டையிட்டுக் கொண்டு சடையார் கோயில் மாட்டு வண்டி மாட்டின் பேரில் விழுந்தன. அந்த மாடுகளும் துள்ளி குதித்த நேரத்தில் அந்த மொட்டை மாட்டுவண்டியில் மேலிருந்த இலைதழைகள் போன்ற மறைப்பு விலகி ஒரு கை விரைப்பாய் வெளியே நீண்டு தெரிந்தது அதைப்பார்த்த மாரீசனும் பிறைசூடநும் ஒருவரை ஒருவர் பார்த்துக்கொண்டு பரஸ்பரம் உணர்ந்தவராய் விரைவாய் சென்று அந்த கையை உள்ளே தள்ளி மூடி மறைத்தனர். அதற்குள்ளாக மாடுகள் சமாதானம் அடைந்தன. உடன் வந்த மூன்று வீரர்கள் கோட்டைவாயில் வீரன் சத்திரத்தின் உள்ளே சென்றுவிட்டார். மாரீசனின் வார்த்தைக்காக அவருடன் வந்திருந்த இரு வீரர்களும்

காத்திருந்தனர் அவருக்காக.

அந்த சமயத்தில் நடந்த விபரீதத்தை அங்கு புதிதாய் வந்த நான்கு கண்கள் விசித்திரமாய் ஆர்வமாய் பார்த்து, பதட்டப்பட்டு வேகமாய் அங்கிருந்து மறைந்தன.

நீ பார்த்தாயா, அது அவருடைய கை தான் அந்த பச்சை குத்தியதை பார்த்தாயா, நாகஅம்பு பச்சையை பார்த்தாயா, நான் பார்த்தேன், நீ பார்த்தாயா என்று அவர்களுக்குள் பேசிக் கொண்டு வேகமாய் நடந்து வீதியில் கூட்டத்தோடு கூட்டமாய் மறைந்தனர். அந்த இருவரும்..

''என்ன ? மாரீசன் அண்ணா எதுவும் விபரீதமா?'' என்றார் பிறைசூடன்.

''ஆமா , தம்பி மிகப் பெரிய விபரீதம், ஒன்று நேற்று நடந்தது ''என்று கூறி அவர் சடையார் கோவிலில் நடந்ததை விவரித்தார்.

''எங்கள் பாசன வாரியத்தார் மகளுக்கு இன்று திருமணம் நடக்கவிருந்தது மணமகன் நமது ஊர்க்காவல் படையில் ஒருவன். நாங்கள் எல்லோரும் நேற்று இரவு விருந்தில் இருந்தோம் மணமகன் வீடு ராஜபாதைக்கு அருகில் இருந்தது. நாங்கள் எல்லோரும் அவன் வீட்டில் இருந்தோம். இரவு நேரங்களில் அந்த வழியில் குதிரைகள் வருவது மிக அரிது. திடீரென இரண்டு குதிரைகளின் சத்தம் கேட்க எங்களில் ஒருவன் என்னவென்று பார்க்க போனான் . அப்போது அங்கு வந்தவர்களில் ஒருவர் குதிரையிலிருந்து இறங்கி எங்கள் வீரனிடம் பேசினார், பேசியதன் சாராம்சம் எங்களுக்கு தெரியவில்லை. குதிரை வீரர் எங்கள் வீரன் மீது அம்பை எய்தான். நாங்கள் பதறிக்கொண்டு ஓடினோம், எங்களை எதிர்பார்க்காத அவன் எங்களை கண்டு மிரண்டு போனான். குதிரையை தவற விட்டுவிட்டான். அங்கு இருந்த நாங்கள் எல்லோரும் அவனை துரத்திக் கொண்டு ஓடினோம். அவன் பதட்டத்தில் எங்கள் மீது அம்புகளை எய்ய ஆரம்பித்தான். அந்த அம்புகள் பட்ட மாத்திரத்தில் எங்கள் வீரர்கள் மடிந்தனர். நான் இதை பார்த்து குழம்பிக்கொண்டே அவனைத் துரத்திக்கொண்டு ஓடுகையில் இறந்த வீரனின் ஒரு அம்பை எடுத்துக் கொண்டு அவனைத் துரத்திக் கொண்டு ஓடினேன். ஒரு கட்டத்தில் அவனிடம் அம்பு தீர்ந்து போக நாங்கள் ஐந்து பேர் சேர்ந்து அவனை கொன்று அதுவும் அவன் எய்த அதே அம்பினால் அவனை கொன்றோம். இந்த விபரீதத்தில் மணமகனும் இறந்துபோனார். ஆனால் வந்த இருவர்களில் ஒருவன் தப்பிவிட்டான்.

நாங்கள் இறந்தவர்களின் உடல்களை எடுத்துக்கொண்டு ஊர் சபைக்கு திரும்பும் நேரத்தில் ராஜபாதையில் ஒரு மாட்டு வண்டியும் சில பல குதிரைகளும் தஞ்சை நோக்கி செல்வதை கண்டோம். எங்கள் ஊர் சபையும் வாரியத்தார்களும் என்னையும் இவ்விரு வீரர்களையும் அந்த கொலைகாரகுதிரைவீரனின் பிணத்தை எடுத்துக்கொண்டு தஞ்சை காவல்தலைமையகத்திற்கு கொண்டுபோய் சேர்க்க

சொல்லி ஒரு ஓலை கொடுத்தார்கள். இதோ நாங்களும் அந்த பிணத்தை மறைத்து கொண்டு வந்திருக்கிறோம்'' என்றார் மாரீசன்.

செண்பக வளர்த்து பிறைசூடன் என்ன சொல்வதென்று தெரியாமல் விழித்துக் கொண்டிருந்தார்.

''அண்ணா நீங்கள் கண்ட மாட்டு வண்டியும் சிலபல குதிரை வீரர்களும் நாங்கள்தான்.''

''இதே போல் ஒரு சம்பவம் எங்கள் செண்பக வனத்தில் நடந்தது''. அந்த தாக்குதல் ''இங்கு வாருங்கள்'' என்று கூறி அவர் காதருகே அதுவரை செண்பக வனத்தில் நடந்தவற்றை கூறினார் பிறைசூடன்.

## பயணம் தொடரும் ...

---

# தீபாவளி வாழ்த்து

தித்திக்கும் தீபாவளி, திகட்டாத
தீபாவளி!
மத்தாப்பின் சிரிப்பொலியில்
மன மகிழும் தீபாவளி!

பொட்டு வெடி சப்தம்,
பொறி பறக்கும் தீபாவளி!
சுழன்று வரும் சக்கரமும்
சொக்கவைக்கும் பூத்திரியும் சுவரங்கள்
சேர்க்கும் தீபாவளி.

பூத்து அடங்கும் புசுவானமும்
செவியைப் பிளக்கும் செவ்வானமும்
சீறிப்பாயும் தீபாவளி!

தேங்காய் லட்டும் சீனி லட்டும்
மனதை முட்டும் தீபாவளி!
இல்லார்க்கும் வல்லார்க்கும் இனிமை
சேர்க்கும் தீபாவளி!

இல்லந்தோறும் தீப ஒளி சேர்க்கட்டும்
தீபாவளி.



– அண்ணாதுரை
மன்னார்குடி

# மருத்துவ அனுபவம்



ராணிச்சந்திரன்
மன்னார்குடி

நாம் ஆரோக்கியமாக இருக்க வேண்டும் என்று விரும்புகிறோம். ஆனால் நான் ஆரோக்கியமாக இருப்பேன் என்று நம்புவதில்லை. ஏன் என்றால் சுய சந்தேகம், சுய மறுப்பு, சுய வெறுப்பு என்ற பல கருத்து குவியல்கள் சேமித்து வைத்துக் கொண்டு நமக்கு எல்லாம் தெரியும் என்ற அகங்காரம் நமக்கு வந்துவிட்டது.

மருத்துவத்திற்கு வருபவர்களிடம் ஒரு கசாயம் சொன்னால் அது எனக்கு தெரியும் என்பார்கள். போட்டு சாப்பிட்டிருக்கிறார்களா என்றால் இல்லை. ஆனால் தெரியும் என்று சொல்ல தெரிகிறது, தெரியும் என்று சொல்வது முன்னோக்கி செய்தி அனுப்பிவிட்டு சொல்வது போல அல்ல, தகவல் எண்ணமாகி எண்ணத்தை செயல்படுத்தி அனுபவித்து அனுபவித்த அனுபவத்தை ஆராய்ச்சி செய்து தெளிவாகி முடிவுக்கு வந்தால் தான் தெரியும் என்று சொல்லவேண்டும் .

ஏற்கனவே சேகரித்து வைத்திருக்கும் கருத்துக்களை ஒருபுறம் ஒதுக்கி வைத்து விட்டு இதை படியுங்கள். இயக்கம் தான் ஆற்றலை தருகிறது. ஆற்றல் இருந்தால் தான் இயங்க முடியும்.

இதில் எங்கள் மருத்துவ அனுபவத்தில் இயக்கம் தான் ஆற்றல் என்பதை உணர்ந்தோம். உணவு தேவை, உணவே ஆற்றல் அல்ல அப்படி உணவை ஆற்றல் என்ற கருத்து தான் வைட்டமின், ஐயன், கொழுப்பு, கால்சியம் என்ற சத்துள்ள உணவுகளையும் ,சத்து மாத்திரைகளையும் எடுத்து கொள்கிறோம்.

உடல் உணவை தன்வயப்படுத்த வேண்டும் என்றால் இயங்க வேண்டும். நுரையீரல் இயங்கினால் தான் காற்றை தன்வயப்படுத்த முடியும். இதயம் இயங்கினால் தான் ரத்தத்தை தன்வயப்படுத்த முடியும். சிறுநீரகம் இயங்கினால் தான் நீரை தன்வயப்படுத்த முடியும். குடல் இயங்கினால் தான் உணவை தன்வயப்படுத்த முடியும்.

முழு உடலும் உச்சி முதல் பாதம் வரை இயங்கினால் தான் உணவை நெருப்பை தன்வயப்படுத்த முடியும். அப்படிப்பட்ட இயக்கம் தான் ஆற்றலை கொடுக்கிறது. பெட்ரோல் போட்டு ஒருவண்டி இயங்குகிறது, ஒரு வண்டி இயங்கவில்லை. இயங்கும் வண்டி ஆற்றலாகிறது, இயங்காத வண்டி அழிந்து போகிறது. பக்கவாதத்தில் படுத்த படுக்கையில் இருப்பவர் சாப்பிடுவார். அவருக்கு என் அந்த உடம்புக்கு ஆற்றல் கிடைக்கவில்லை. உடலின் இயக்கத்தை கொஞ்சம் கொஞ்சமாக குறைத்து வந்தால்


ஆற்றல் கிடைக்கவில்லை நன்றாக தான் இருந்தார் மாரடைப்பு வந்து விட்டது திடீர் என்றா வந்தது?

கெட்ட கொழுப்பை வெளியேற்றும் இயக்கம் நீண்ட காலமாக குறைந்து விட்டதால் இன்று மாரடைப்பு. கணையம் இயக்கத்தை குறைப்பதால் தான் ரத்தத்தில் சீரணிக்காத சர்க்கரை சேருகிறது. சிறுநீரகம் இயக்கத்தை குறைப்பதால் தான் திரவ கழிவுகள் வெளியேற்ற முடியவில்லை. இப்படி கணையத்தையும் சிறுநீரகத்தையும் இயங்க வைக்காமல் ஒரு கருவியை வைத்து கூழ்மப்பிரிவு (Dialysis) செய்வதால் தான் ஆற்றல் இழந்து விடுகிறார்கள்.

முழு உடலையும் எந்த அளவுக்கு இயங்குகிறோமோ அந்த அளவுக்கு ஆற்றலோடும் அதிக காலம் ஆரோக்கியமான ஆயுளோடும் வாழ முடியும். உடற்பயிற்சி (Physiotherapy) போன்ற மருந்தில்லா மருத்துவ முறைகள் அனைத்தும் இயங்க வைக்கும் மருத்துவங்கள் தான். உடலை இயக்குவோம் உடலின் மேன்மையை உணருவோம்.

வாழ்க வளமுடன் .....

**- ராணிச்சந்திரன்**



# காட்சிப்பிழை



செந்தில் பக்கிரிசாமி
மன்னை

## அத்தியாயம் 1

கண்ணால் காண்பது பொய்.

எப்போதும் போல ஒரு நாள் காலை கூட்டம் மிகுந்த பேருந்து பயணம். ஆனால் எப்போதும் போல இல்லாமல் அன்று சன்னலோர இருக்கை.

தினசரி காலை அனைவரும் வேலைக்கு செல்லும் உச்ச நேரத்தில் இது போல சன்னலோர இருக்கை என்பது எவ்ளோ பெரிய அரிய சிம்மாசனம் என்று தினசரி பயணிகளுக்குத் தெரியும் .

அப்படி என்ன அந்த இருக்கையின் மகிமை? ஒரு திரைப்படத்தில் கூட ''பேருந்தில் நீ எனக்கு ஜன்னல் ஓரம்'' என்று ஒரு வார்த்தை வரும்.தான் காதலிக்கும் பெண் எப்படிப்பட்ட முக்கியத்துவம் வாய்ந்தவள் என்று ஒருவன் ஒப்பிடும்போது சன்னலோர இருக்கையை குறிப்பிடுகிறான் என்றால் அது எந்த அளவு முக்கியத்துவம் என புரியும்.

நம்மை கடந்து செல்லும் இந்த உலகத்தை நாம் நம் கண் முன்னே கண்டு உணர, முகத்தில் அடிக்கும் காற்று சிகையை கலைக்கும் அழகு இவை எல்லாம் அனுபவித்தவருக்கு தெரியும், அந்த இருக்கையின் முக்கியத்துவம்!

அது ஏனோ தெரியவில்லை. சிறு வயதில் இருந்து எந்த வாகனத்தில் பயணம் செய்தாலும் சன்னலோர இருக்கையை தேடித்தான் மனம் செல்லும்.

சிறு வயதில் பேருந்து வேகமாக செல்லும் போது நம் கூடவே வருவது போல் இருக்கும் மரங்கள், நேராக இருக்கும் மின்சார கம்பிகள் வளைந்து நெளிந்து கூடவே வருவது போல் இருப்பதற்கு பின்னால் ஒரு அறிவியல் உள்ளது என அறியாமல் அந்த ஒளியியல் மாயையை உண்மை என நம்பிய காலம் உண்டு.

இரவு நேரம் நாம் நடக்க நடக்க கூடவே நம்மை பின்தொடர்ந்து வரும் நிலவினைப் போல, அதில் சிலர் நிலா என் கூடத்தான் வருகிறது என சாதிப்பர். இது போன்ற ஞாபங்கள் அடிக்கடி சன்னலோர பயணத்தில் என்னை கடந்து செல்லும்.

இதுவும் ஒரு காரணம் அங்கு அமர.

அதில் மிகுந்த ஆச்சர்யம் என்னவென்றால் சம வேகத்தில் அருகில் ஒரு பேருந்து நம்மை கடந்து செல்லும் போது பேருந்துகள் நின்ற இடத்திலே நிற்பது போல் ஒரு உணர்வு ஏற்படும்.

அதே போல் எதிர் திசையில் இருந்து நம்மை ஏதேனும் ஒரு பேருந்து கடந்து செல்லும் போது அதி பயங்கர வேகத்தில் செல்வது போல இருக்கும்.இது எதனால் என்பது பின்னால் கல்லூரியில் படிக்கும் போது தெரிந்தது.

சார்பு திசைவேகம் (relative velocity).

அதாவது ஒரே திசையில் பயணிக்கும் இரு வாகனங்களின் சார்பு வேகம் என்பது இரு வாகனங்களின் வேகத்தையும் கழிக்க வேண்டும். உதாரணமாக இரண்டு பேருந்துகளும் சம வேகம் என்றால் கழிக்கும் போது சுழியம். எனவே பேருந்துகள் நகராமல் நின்ற இடத்திலேயே நிற்பது போல் ஒரு உணர்வு ஏற்படும் நமக்கு.

அதே போல் எதிர் எதிர் திசையில் இரு வாகனங்கள் ஒன்றை ஒன்று கடந்து செல்லும் போது இரண்டு வாகனங்களின் வேகத்தையும் கூட்டி கொள்ள வேண்டும். அதாவது இரண்டு பேருந்துகளும் 60டுட்/டணூ வேகத்தில் சென்றால் நாம் 120டுட்/டணூ வேகத்தை உணர முடியும்.

இப்படியாக பல்வேறு ஆச்சரியங்களும், சுகங்களும் ,அறிவியலும் மிகுந்த அந்த சன்னலோர பயணத்தை அன்று என்னால் முழுமையாக அனுபவிக்க முடியாத நிலை....

## அத்தியாயம் 2

காதால் கேட்பதும் பொய்.

கண்ணை மூடி சுகமாக ரசித்து கொண்டு இருந்த என் நினைவுகள் சிதையும் அளவிற்கு ஒரு வினோதமான, சகித்து கொள்ள முடியாத ஒரு சத்தம்.

என் பின்னால் இரண்டு வரிசை தள்ளி ஒரு இளைஞன் கையில் ஒரு கைப்பேசியை வைத்துக்கொண்டு கையை ஆட்டிக் கொண்டு அகோரமாக கத்திய சத்தம் தான் அது.

இந்த கால இளைஞர்கள் கைப்பேசிக்கு அடிமை என்று தெரியும். அதற்கென இப்படியா? அரை லூசு மாதிரி பொது இடத்தில் நடந்து கொள்வது என என் மனம் நினைப்பது சரி என கூட பயணித்த பயணிகளின் பார்வை மற்றும் சலிப்பை வெளிப்படுத்தும் சத்தங்கள் உணர்த்தின.

பின் மீண்டும் 1 நிமிடம் கழித்து அதே சத்தம் .அந்த இளைஞன் அவன் கைப்பேசியுடன்

சண்டை போட்டு கொண்டு இருந்தான்.

அப்போது எனக்கு புரிய ஆரம்பித்தது. இவன் ஏதோ கைப்பேசி காணொலி விளையாட்டிற்குள் விழுந்து விட்டான். அங்கு எத்தனை பேர் இவனை துரத்துகிறார்களோ அல்லது சுடுகிறார்களோ அல்லது குழிக்குள் விழுந்து ஓடுகிறானோ, யாருக்கு தெரியும்? ஒருவேளை அந்த பாதிப்பில் கத்துகிறான் போல என்ற ஒரு மதிப்பீட்டிற்கு வந்தேன்.

என்ன விளையாட்டு இது ?? ஒருவருக்கு ஒருவர் உண்மையாக உடல் வருத்திக் கொண்டு கத்திக்கொண்டும் ஓடிக்கொண்டும் விளையாடிய காலம் போய் இப்ப என்னனா தனிமையில் கற்பனை உலகத்தில் வீர சாகசம் புரிந்து கொண்டும் கத்திக்கொண்டும் இருப்பது என்ன எழவு ஆட்டமோ.

அவன் ஆடும் ஆட்டம் எப்படா முடியும் என்று நினைத்துக் கொண்டு என் இனிய பயணத்தை சற்று சிந்தித்துக் கொண்டு இருந்தேன்.

அவன் சத்தம் குறைவதாக இல்லை.

1 நிமிட இடைவெளி இப்ப 20 நொடி ஆனது.பயணிகள் யாராலும் பொறுக்க முடியவில்லை. இருந்தும் யார் முதலில் சொல்வது என்ற தயக்கம். முடிவில் ஒருவர் சொல்லியே விட்டார். அவரைத் தொடர்ந்து சங்கிலி விளைவாக (இதிலும் ஒரு அறிவியல்) பலர் தங்கள் மனக்குமுறல்களை கொட்டி விட்டனர்.

அவன் எதையுமே காதில் வாங்கிக் கொள்ளவில்லை. மாறாக மேலும் சத்த இடைவெளியை குறைத்து கொண்டான். இப்போது 10 நொடிகளுக்கு ஒருமுறை கத்தத் தொடங்கி விட்டான்.

பின் நடத்துனரிடம் புகார் செய்ய அவர் பங்குக்கு அவரும் வந்து அவர் வசவை தெரிவித்து விட்டார்.

ம் கூம்.. எந்த முன்ன்னேற்றமும் இல்லை. இப்போது இடைவெளியே இல்லாமல் கத்திக்கொண்டு இருந்தான்.

இப்போது அவனைப் பற்றிய என் மதிப்பீடு மாறியது.அவன் ஒன்றும் விளையாட்டின் காரணமாக கத்தவில்லை. அவன் ஏதோ மனநலம் பாதிக்கப்பட்டவன் போல எனக்குத் தோன்றியது.

அவனிடம் மன்றாடிக் கொண்டு இருந்த நடத்துனரிடம் கேட்டுக்கொண்டேன்'' விடுங்க. அவன் ஏதோ பைத்தியம் மாதிரி இருக்கான்''.

பின் பேருந்து முழுதும் அவன் நினைவுகளே ஆக்கிரமித்து கொண்டன. இப்போது அனைவர் எண்ணமும் ஒன்று தான் ,அவன் எப்ப பேருந்தை விட்டு இறங்குவான் என்று.

எனக்கு ஒரு சந்தேகம் அவன்தான் மன நலம் பாதிக்கப்பட்டவன் ஆயிற்றே, அவன் எப்படி சரியான நிறுத்தத்தில் இறங்குவான் என்று.

அப்படி நான் யோசித்து கொண்டு இருக்கும் வேளையிலே, அவன் அவன் இருக்கையை விட்டு எழுந்தான்.

அப்போது ஒரு நிறுத்தம் வரப் போகிறது என எனக்குத் தெரியும். அவனுக்கு எப்படித் தெரிந்தது? என நான் யோசிக்கும் நேரத்தில் என் அருகில் வந்து நின்றான்.

அப்போது அவன் கைப்பேசியின் திரை நான் பார்க்கும் தூரத்தில் இருந்தது.

எனக்கு ஒரு ஆவல், அதில் அப்படி எதைப் பார்த்து கத்திக் கொண்டு இருந்தான் என்று, எட்டிப்பார்த்தேன்.

## அத்தியாயம் 3

தீர விசாரிப்பதே மெய்.

அந்த திரையில் ஒரு வயதான பெண்மணி பேசிக்கொண்டு இருந்தார் ஒரு காணொலி அழைப்பில் (video call).

பேசிக்கொண்டு இருந்தார் என்பதை விட பாவங்கள் காட்டிக்கொண்டு இருந்தார் உடல் மொழியின் மூலம்.

பேசியவர் இளைஞனின் அம்மாவாகத் தான் இருக்க கூடும். காது கேட்க முடியாத, வாய் பேச முடியாத ஒரு மாற்றுத் திறனாளி தன் தாயுடன் இவ்ளோ நேரம் தன் மகிழ்ச்சியையும், கோபத்தையும் காட்டிக் கொண்டு அவனுக்குத் தெரிந்த மொழியில் கத்திக்கொண்டு ...

(மன்னிக்கவும் பேசிக்கொண்டு இருந்தான்) என்று நான் தமிழ்த் திரைப்படத்தில் வருவது போல இறுதியில் தான் உணர்ந்தேன் என்று நினைக்கும் போது ..

- மன்னை செந்தில் பக்கிரிசாமி

# தமிழன் கட்டி ஆண்ட யாழி

யாழியையே கட்டி ஆண்ட தமிழன் என்று சொல்வார்களே! யாழி என்பது ஒரு விலங்கு. மிக ஆக்ரோசமான விலங்கு. அதை கட்டி ஆண்ட பெருமை தமிழனுக்கே உரியது.

அலெக்சாண்டர் குதிரை படை இந்தியர்களின் யானை படையை எதிர்கொள்ள முடியாமல் தோற்றுப்போனதாக சொல்வார்கள். யானையை விட பல மடங்கு பெரிய விலங்கு யாழி. நாம் வாழும் இக்காலத்தில் யானை தான் பெரிய விலங்கு. ஆனால் முற்கால சோழர்கள் காலத்தில் யாழியே மிக பெரிய விலங்கு. டைனோசரஸ் ஐ விட பெரிய விலங்கு யாழி. அதை கட்டி போர் செய்த மாவீரர்கள் தமிழர்கள்.

யாழி குமரிக்கண்டத்தில் வாழ்ந்தவை. குமரிக்கண்டம் அழிந்த போதே யாழியும் அழிந்துவிட்டது. தற்போது யாழியை கோயில் சிற்பங்களில் மட்டுமே காண இயலும். யானையின் தும்பிக்கையை தன் நீண்ட நாக்கால் கோர்த்தவாறு நமது மன்னார்குடி பெரிய கோவில், தஞ்சை பெரிய கோவில், மதுரை மீனாட்சி அம்மன் கோவில், சிதம்பரம் கோவில், திருவண்ணாமலை கோவில் போன்ற பல பழங்காலத்து கோயில்களில் காணலாம். யானை அதன் கால் உயரத்துக்கு தான் இருக்கும்.

யாழியின் வகைகள்

மகர யாழி - ஆட்டின் முகம், சிங்கத்தின் கால்கள், குதிரையின் உடம்பு
சிம்ம யாழி - சிங்க முகம், சிங்க உடல், சிங்க கால்கள்
யானை யாழி - மேலே குறிப்பிட்டவாறு தன் நீண்ட நாக்கால் யானையின் தும்பிக்கையை பிடித்தவாறு இருக்கும்

தமிழரின் பெருமையான யாழியை பற்றிய ஆய்வினை தமிழ்நாடு அரசாங்கம் மற்றும் தொல்லியல் துறை கையிலெடுக்க வேண்டும் என கேட்டுக்கொள்கிறேன்.

- G.T. மகேஷ்



# வெளிநாட்டு வாழ்க்கை...

ஆணவமாய் திரிந்தேன் தாய்நாட்டில்,
அடங்கி கூனி குருகி நின்றேன்
அயல்நாட்டில்.

காலையில் காபியை போட்டு வைத்து
விட்டு
எழுந்து குடிச்சிட்டு தூங்குடா என்று
சத்தம் கேட்டு பலநாள் ஆகிவிட்டடது,

தாய்நாட்டில் காலையில் காபியை
குடித்துவிட்டு வயல்வெளியில் சுற்றி
விட்டு திரிந்தேன், ஆனால்
இங்கு காலை உணவே எனக்கு
காபி-தான் என்று ஆகிவிட்டது.

தாய் தந்தை அண்ணன் அக்கா
என எல்லா சொந்தங்களையும் இழந்து
எல்லோருடைய பாசத்தை மட்டும்
சுமந்துக் கொண்டு நானும் வந்தேன்
அயல்நாடு.

காலை பத்து மணிவரை தூங்கிய
தூக்கம்
இங்கு ஆறு மணிநேரமாய் மாறியது
எனக்கு.

தாய்நாட்டில் தலைகால் புரியாமல்
ஊரை சுற்றி விட்டு திரிந்து கொண்டு
சாப்பிட கூட நேரம் இல்லாமல்
வாழ்ந்து கொண்டு இருந்தேன்...

ஆனால்..!

இங்கு



S.S.கார்த்திக்

அதிகாலையில்
எழுந்து
அரக்கபறக்க
குளிர்த்துவிட்டு
கையில் ஒரு காபி
பையை
சுமந்துகொண்டு
இரவு சமைத்த
உணவை மறு
கையில்
பொட்டணமாய்
கட்டிக் கொண்டு
வாகனத்திற்காக வரிசையில் காத்துக்
கொண்டு இருக்கும்போது தான்
தெரிகிறது தாய்நாட்டின் அருமை..

சுட சுட சமைத்து சாப்பிடும் போது
ஆயிரம் குறைபாடு சொல்லிவிட்டு
சாப்பிடும் போது தெரியவில்லை
அம்மாவின் அருமை!
இங்கு ஆறி போன சாப்பாடை
சாப்பிடும் போதுதான் தெரிகின்றது...

இங்கு
இரவு சமைத்த உணவு கெட்டு போய்
விட்டாலும் மதிய உணவு காபியாய்
மாறிவிட்டது எனக்கு....

சமைக்கவே தெரியாத எனக்கு
இங்கு
நான்தான் சமையல்காரன்...

வீட்டில் சமையல் அறை கூட
தெரியாத எனக்கு இங்கு
சமையலறைதான் மகிழ்ச்சி ...

உப்பு உறப்பு தெரியாது எனக்கு,
ஆனால் எல்லாவற்றையும்
கற்றுகொடுத்துவிட்டது

எனக்கு
இந்த அயல்நாடு...

உடல் நிலை சரியில்லை என்று
மூன்று நாள் படுத்தால் கூட
என்னப்பா ஆயிற்று உனக்கு
என்று கேட்க என் அன்னை இல்லை
இங்கு
எனக்கு முகம் தெரியதாத
தோழர்கள்தான் எனக்கு துணை...

வீட்டிலில் பஞ்சு மெத்தையில்
தூங்கியவனுக்கு இங்கு தார்படுதாய்
மெத்தையானது...

படுத்தால் தூக்கம் வரவில்லை
வாழ்க்கையை நினைத்து பயம்
வந்துவிட்டது ஆயுள்முழுவதும்
அயல்நாடு என்று ஆகிவிடுமோ
என்று...

ஊரில் இருந்து ஒரு அலையோசை,
தம்பி அக்காவிற்கு ஆண்குழந்தை
பிறந்து உள்ளது என்று பணியிடத்தில்
இருந்த எனக்கு மகிழ்ச்சியில் தலைகால்
புரியவில்லை ...

கண்களின் ஓரம் கண்ணீர்
கரைபுரண்டு ஒடுகிறது.
தவம் இருந்து
பெற்றெடுத்த தங்கத்தை
என் கையில்
கட்டி அணைக்க
நான் இல்லை,
அருகில் என்ற
ஆனந்த கண்ணீர்....

மருமகளை கையில் ஏந்தியபோது
வந்த கண்ணீரை விட
மருமகனை அலைபேசியில்
பார்த்தபோது வந்த கண்ணீருக்கோ
அளவு இல்லை...

பணம் என்னும் ஒரு போதைக்காக
ஆயுளை இழந்தும்
சொந்தங்களை இழந்தும்
எண்ணிலடங்காத
மகிழ்ச்சியையும்
சொல்லமுடியாத வலிகளையும்
வேதனையும்
சுமந்து கொண்டு உள்ளே
அழுதும் வெளியில் சிரித்து கொண்டும்
குடும்பத்தின் மகிழ்ச்சிக்காக அயராமல்
உழைத்துக்கொண்டிருக்கும்
வெளிநாட்டு வாழ்
மனிதனில் நானும் ஒருவன்....

நானும் வெளிநாட்டுகாரன்தான்...

--
கண்ணீருடன்....

S.S.**கார்த்திக்,** DME
உள்ளிக்கோட்டை

இணையத்தில் நீங்கள் பார்த்து பிடித்திருந்தால் அதை போலவே உங்களுக்கு வடிவமைத்து தருகிறார் மன்னார்குடியை சார்ந்த ராஜேஸ்வரி சுரேஷ் குமார். அவரின் படைப்புகளின் சிலவற்றை இங்கு பதிகிறோம்.

## ராஜேஸ்வரி சுரேஷ்குமார்

பகிரி
+91 9842051896









# மகாதேவப்பட்டணம் மராட்டிய மன்னர் கோட்டை



சீதாரம் சங்கர்
உள்ளிக்கோட்டை

காலங்களைக் கடந்த காதல் சின்னங்களுள் ஒன்றாக விளங்கும், திருவாரூர் மாவட்டம், மகாதேவப்பட்டணத்தில் உள்ள மராட்டிய மன்னர் கோட்டை தமிழகத்தில் ஆட்சி செய்த மராட்டிய மன்னர்களில் குறிப்பிடத்தக்க இடம் பெற்றவர் துளஜா. இவரது ஆட்சிக் காலம் கி.பி. 1729-1735 வரை எனப்படுகிறது. இவர் தனது சகோதரர்கள் சாக்கோட்டை சகசி மன்னர், தஞ்சை சரபோஜி மன்னர் ஆகியோருடன் இணைந்து ஆட்சி செய்ததாக தருமாகூடம் என்ற வரலாற்று நூல் தெரிவிக்கிறது.

திருவாரூர் மாவட்டம், மன்னார்குடி அருகே உள்ள மகாதேவப்பட்டணம் பகுதிக்கு தனது சகாக்களுடன் வேட்டையாட வந்த மராட்டிய மன்னர் துளஜா, ஒரு முயலானது வேட்டை நாயைத் துரத்திச் செல்வதைக் கண்டு வியந்தார், அந்த இடத்தில் 56 ஏக்கர் பரப்பில் ஒரு பெரிய கோட்டையை அமைத்தார் என்பது மகாதேவப்பட்டணம் மராட்டிய மன்னர் கோட்டையின் வரலாறு.

இந்தக் கோட்டைக்கு மற்றொரு சுவாரஸ்யமும் உள்ளது. அது, ஷாஜஹான் தனது மனைவி மும்தாஜுக்காக தாஜ்மகாலை கட்டியது போலவே, தனது காதலின் நினைவாக துளஜா மன்னர் இந்தக் கோட்டையைக் கட்டினார் என்பதே. இதன்மூலம், காலங்களைக் கடந்து நிற்கும் காதல் சின்னங்களுள் ஒன்றாக விளங்குகிறது இந்த மராட்டிய மன்னர் கோட்டை. 15 அடிக்கும் அதிகமான உயரம் கொண்ட சுற்றுச் சுவர்கள் உள்ள இந்தக் கோட்டைக்குள் 63 நாயன்மார்களின் சிலைகள் உள்ளன.

துளஜா மன்னரின் காதலி உமாபாய் அடக்கம் செய்யப்பட்ட இடம், அரிய ஓவிய வேலைப்பாடுகளுடன் காணப்படுகிறது. உமாபாயின் உடலுடன் அவர் பயன்படுத்திய தங்க ஊஞ்சல் உள்ளிட்ட தங்க ஆபரணங்களும் 30 அடி ஆழத்தில் புதைக்கப்பட்டதாகவும் செவிவழிச் செய்திகள் உள்ளன.

மாதவ பூமி என்ற பெயர் பிற்காலத்தில் மகாதேவப்பட்டணமாக மருவியதைப் போல, துளஜா மன்னரின் காதலி உமா பாயின் பெயர் பிற்காலத்தில் ஊமை அப்பாயி என மருவி வழங்கி வருவதாகக் குறிப்பிடப்படுகிறது. தாஜ்மகால் போன்ற ஊமை அப்பாயி நினைவுமண்டபம் தெற்கு சீதாரத்தில் அமைந்துள்ளது

உள்ளிக்கோட்டை, ஆலங்கோட்டை, தளிக்கோட்டை, நல்லிக்கோட்டை, பரவாக்கோட்டை, அத்திக்கோட்டை, நெடுவாக்கோட்டை, ஆவிக்கோட்டை,

சுந்தரக்கோட்டை, கூப்பாச்சிக்கோட்டை ஆகியன மகாதேவப்பட்டணத்தைச் சுற்றியுள்ள ஊர்களின் பெயர்கள். இவற்றின் மூலம், மகாதேவப்பட்டணமும் அதைச் சுற்றியுள்ள பகுதிகளும் கடந்தகால வரலாற்றில் குறிப்பிடத்தக்க இடம் பெற்றவையாக இருந்திருக்க வாய்ப்புள்ளதை அறிய முடிகிறது. கலைநுட்பம் பொருந்திய இந்தக் கோட்டைக்குள் கடவுள் வராக பெருமாள் என்ற பெயருடன் அருள் பாலித்து கொண்டிருக்கிறார் என்பது குறிப்பிட தக்கது,

**- சீதாரம் சங்கர்** B.Sc., M.T.T.M., D.C.F.A.,

---

# தீபாவளி கனவு

விடிந்தவுடன் எண்ணெய் குளியல்!
பட்சணங்களின் வாசமோ பலதூரம்
சென்று இருக்க,
முன்னரே வந்துவிட்டது பசி,
பளிச்சென காலியானதே தட்டும்
பலகாரமும்!

மூன்று வேலைக்கும் மூன்று ஆடைகள்
அணிவகுத்தது, தரைசக்கரமோ
வாசலில் வட்ட கோலம் இட்டது.

ராக்கெட்டை செலுத்தும் முன்
ஒரு அதிர்ந்த குரல்,
தீபாவளிக்கு முன் வேலையை
முடிக்கவேண்டும்
முதலாளியின் அதிர்ந்த
குரலில் சுய உணர்வு வந்தது.

கையில் இருந்த
வெடிவண்ணங்களையும்
என் கனவையும்
தட்டிவிட்டு எழுந்தேன், ஏய்
கனவே உன்னிடம் நான் எப்படி
கூறுவேன்!

அடுத்த வெடியின் திரி செய்தால் தான்
நான் அடுத்த தீபாவளிக்காவது
கால்சட்டை
எடுக்க முடியும் என்று!

--
**தர்ஷினி நாகூரான்**

# மன்னை என்கின்ற மன்னார்குடியும் சிங்கை என்கின்ற சிங்கப்பூரும் ...

மன்னார்குடி பகுதியை சார்ந்த மக்களுக்கும் அதை உள்ளடக்கிய கிராமங்களுக்கும் சிங்கப்பூருக்கும் ஆன தொடர்பு கிட்டத்தட்ட மூன்று நான்கு தலைமுறைக்கும் ஆனது. அதைவார்த்தைகளில் அல்லது எழுத்துகளிலோ அடக்கி விட முடியாது.

மன்னார்குடியில் இருந்து பிரியும் பட்டுக்கோட்டை,
மன்னார்குடி - திருமக்கோட்டை,
மன்னார்குடி - முத்துப்பேட்டை,
மன்னார்குடி - திருத்துறைப்பூண்டி,
மன்னார்குடி - கும்பகோணம்,
மன்னார்குடி - தஞ்சாவூர்,
மன்னார்குடி - திருவாரூர்,
மன்னார்குடி - ஒரத்தநாடு

இந்த பகுதிகளில் உள்ள கிராமங்களில்  வீட்டில் ஒருத்தர் சிங்கப்பூரில் பணி செய்த காலங்கள் உண்டு. இந்த பகுதி மக்களின் வளர்ச்சிக்கு அதுவே கூட காரணமாக இருக்கலாம்.

சில நபர்கள் நினைப்பது போல் வெளிநாட்டில் பணம் மரத்தில் காய்ப்பது இல்லை. இன்று தொழில்நுட்பம் ஆயிரம் மடங்குவசதிகளை அளிக்கிறது. ஒரு இருபது அல்லது முப்பது வருடம் முன்னாள் போவோம்.

ஒரு வீட்டில் பல பெண் பிள்ளைகளுக்கு இடையில் ஒரு ஆண் பிள்ளை வளர்ந்துவரும்.

அந்த புள்ள தன் குடும்ப வசதிக்கு உட்பட்டோ அல்லது தன் புத்திக்கு உட்பட்டோ பள்ளி படிப்பை முடிக்கும் அல்லது முடிக்காமலும் போகும். இன்னும் மிஞ்சினால் ஐடிஐ படித்து முடிக்கும்.

அப்பா கூலி வேலைக்கு போயிட்டு இருப்பாரு அல்லது 200 குழி சொந்தநிலத்தை வைச்சிகிட்டு பாமணி ஆத்தையும்,கோரை ஆத்தையும் நம்பி வாழ்க்கையை ஓட்டிக்கிட்டு இருப்பாரு.

அந்த தலை மகனுக்கு மீசை மொலைக்காமலே மொத்த குடும்ப பாரமும் அவன் தலை மேல் ஏறும்.

வீட்டில் மெல்ல பேச்சு அடிப்படும். ஒன்னு தன் சொந்த கிராமத்துக்காரன் அல்லது சொந்தக்காரன் சிங்கப்பூரில் இருப்பான்.

அன்றே அவன் வாழ்க்கையை தீர்மானிக்கும் உரிமையை இழக்கிறான். சொந்தகாரன் மூலமாவோ அல்லது ஒரு முகவர் (Agent) புடிச்சி சிங்கப்பூருக்கு போறதுக்கு ஏற்பாடு பண்ணுவாங்க.

இந்தா அந்தானு ஒரு ஆறு மாசத்துல விசா வந்து சேரும். அதுவும் முழுக்க முழுக்க ஓவர் ஸ்டே விசாவாதான் இருக்கும். முகவர்க்கு காசு குடுத்து ஆவனும். அத பொறட்டி கட்டுறதுக்குள்ள அந்த அப்பன் படுற கஷ்டம் அவன் பரம்பரையே பட்டு இருக்காது.

அம்மா,அக்கா தங்கச்சி கைல காதுல போட்டு இருக்குறது, செருவாடு காசு, மாடுகன்னுகுட்டி விக்கிறது, நிலத்தை விக்கிறது அல்லது அடமானம் வைக்கிறது, வட்டிக்கு வாங்குறது என சகல துன்பங்களும் பட்டு முக்காவாசி காச கட்டி, மீதிய அங்க போய் தருவான் என பேசி முடிப்பான்.

ஒரு வழியா பணத்தை கட்டி, கிளம்ப ஏற்பாடு ஆகும், ரெண்டு மூணு நாளைக்கு நெருங்கிய சொந்த காரங்க வீட்டுல விருந்து இருக்கும்... அப்பறம் குல தெய்வகோயில் வழிபாடு மற்றும் வேண்டுதல்....

அவன் கௌம்புற அன்னைக்கு கறி மீனு கோழின்னு ஒரே தட புடலா இருக்கும் ... சாயங்காலம் அஞ்சு மணிக்கு கொஞ்ச கொஞ்சமா எல்லாருக்கும் மூஞ்சுதொங்க ஆரம்பிக்கும், அழுக சத்தமும் கேட்கும்.

அவன் ஊர்ல வெளிநாட்டுல உள்ளவங்க வீட்டுலேருந்து வடவம், கருவாடு எல்லாம் கொண்டாந்து குடுப்பாங்க, எங்களுக்கு ஒரு பிரச்னையும் இல்ல அவனை ஒழுங்கா சாப்பிட சொல்லுனு, ரெண்டுபேரு வந்து சொல்லிட்டு போவாங்க, அதுகூட அவன் எடுத்த ஐந்து பேண்டு சட்டையும் வைத்து பொட்டி தயார் ஆகும்....

அவன் தங்கச்சி எல்லாம் என் அண்ணன் என  அழுவ ஆரம்பிக்கும். அம்மாவுக்கு ஒழுங்கா சாப்டுயா என்ற வார்த்தையை தவிர அடுத்த வார்த்தை பேச வராது. அப்பன் காரன் பனியனும் கைலியுமா திண்ணையிலே உட்கார்ந்து இருப்பான். அவன் நோட்டு புத்தகம் எல்லாத்தையும் தடவி தடவி பார்ப்பான் ,மாட்டு கொட்டாய் , கொல்லை பக்கம் எல்லாத்துகிட்டயும் சொல்லிட்டு தாளாத பாரத்துடன், பொறுப்புடனும் கிளம்புவான்.

மெட்ராசுக்கு யாரு ஏத்தி விடபோறதுன்னு ஒரு விவாதம் வந்து ரெண்டு ஆளு முடிவு ஆகும், மன்னார்குடி பேருந்து நிலையத்துக்கு ஒரு பத்து ஆள் வரும்.. வழி அனுப்பி வைச்சிட்டு எல்லாரும் ஊருக்கு போய்டுவாங்க.

அந்த ரெண்டு ஆளும் அவனை விமானம் ஏத்தி விட்டுட்டு ஊர சுத்தி பார்த்துட்டு ஏதாவது பொருள் வாங்கிகிட்டு ஊருக்கு வந்து சேரும். அந்த பொருள் பார்த்து யாரும் கேள்வி கேட்கும் போது எல்லாம் இந்த பயல ஏத்தி விட போனப்ப வாங்குனதுனு சொல்லுவாங்கே...

மொழி தெரியாத ஊர்ல மொழியை மதிக்கிற ஊர்ல அவனும் போய் இறங்குவான். அவன் போய் இறங்குற வரைக்கும் வீட்ல கன்னு குட்டிக்கு கூட பசி எடுக்காது.

அதுக்கு அப்பறம் எப்புடியோ அவனை இவனை புடிச்சி ஒரு பத்துக்கு பத்துரூமுல பதினோராவது ஆளா போய் தங்குவான்....

ஊருக்கு தகவல் தெரிவிப்பான். ஒரு கிராமத்துக்கு ரெண்டு பேரு வீட்ல அல்லது நெல்லு  கடையில்தான் போன் இருக்கும். அங்க அடித்து மாமா நான் வந்துட்டேனு சொல்லுங்க என்பான். அவரும் சரியா, நான் சொல்றன் நீ பார்த்து இருந்துக என்பார்.

தெரிந்தவர்களுடன் சேர்ந்து மெல்ல மெல்ல வேலைக்கு போக ஆரம்பிப்பான். கட்டட வேலை முதல் கக்கூசு கழுவுவது வரை ....

அந்த பொழுதில் இருந்தே அவன் தேவைக்கு பத்தாமலே தன் குடும்பத்திற்காக சேமிக்க ஆரம்பிப்பான். அவன் எப்ப சாப்பிடுவான் என்ன சாப்பிடுவான் எப்ப தூங்குவான் அப்டிங்குறது அவனுக்கு மட்டுமே தெரியும்.

மாசம் ஒரு கடுதாசி வீட்டுக்கு போகும். தெரிஞ்சவங்க மூலியமா கொஞ்சம் காசும் போகும். இதில் தடுமாறி போறவர்கள் மேல் வர இன்னும் ஒரு தலைமுறையே ஆகும்...

கொஞ்சம் வீட்டுல பணம் சேர்ந்த உடனே கொஞ்ச கொஞ்சமா வட்டியை மட்டும் கட்டுவாங்க, அவங்க அம்மா சொல்லும்..என்னங்க முதல்ல ஒரு மாட்ட வாங்குங்ககன்னு குட்டி மட்டும் தனியா நிக்கிது.. மாடும் இல்லாம ஒரு வேலையும் புரிய மாட்டேங்குது.

அவன் போடுற கடுதாசி வீட்டு கூரகுள்ளயோ அல்லது தங்கச்சி புத்தகம் உள்ளயோ அல்லது சீரக டப்பாக்குள்ளயோ அழகுப்படுத்தும்.

அவன் அம்மாவுக்கு நல்ல குழம்பு வைக்கும் போதெல்லாம் அவன் முகம்முன்ன வந்து சோத்த உள்ள இறங்கவிடாது.

கொஞ்சம் பணம் சேர்த்து வீட்டுக்கு துணிமணி எல்லாம் வாங்கி அனுப்புவான். கடன் கால்வாசி அடஞ்சி இருக்கும். வீட்டுக்கு அப்ப தான் கரண்டு இழுத்து இருப்பான்.

ரெண்டு வருடங்கள் ஓடி இருக்கும்.

கொஞ்சம் களைப்பு ஆறலாம்னு நினைக்கும் போது ஒரு கடுதாசி வரும்,எப்பா பெரிய அக்காவுக்கு மாமா ஒரு ஜாதகம் கொண்டாந்து குடுத்துட்டு போய் இருக்கான் நல்ல இடமாம். நக நட்டுதான்கூட எதிர் பார்ப்பவோ போலருக்கு...

கொஞ்சம் கடனை உடன வாங்கி அந்த அக்காவை கரை சேர்ப்பான். வருசம் மூணு, அவனுக்கும் வரணும்னு ஆசை, ஆனா முடியாது.

வீட்டுலேர்ந்து இன்னொரு கடுதாசி வரும், கூர கீத்த மாத்துனா தான் இந்த ஐப்பசியை ஓட்டலாம்னு.

அவன் ஜீன்ஸ், பெல்ட்டு, சூ எல்லாம் போட்டு  போட்டா ஒன்னு அனுப்பி வைப்பான். அது அவன் வீட்டு முகப்பில் எப்போதும் மாட்டப்பட்டு இருக்கும்..

ஒரு வழியா வீட்ல பேசுறதுக்கு ஒரு போன் வைப்பாங்க. அடிக்கடி போன் பேசுறதுல அவனுக்கு பாதி பாரம் குறையும். அவங்க அம்மா சொல்லும் மாடு மூணாம் ஈத்துக்கு கிடேரிகன்னு போட்டு இருக்குனு. அவன் சீம்பால் குடிக்கணும்னு நெனைப்பானா இல்ல சித்தப்பன்கிட்ட வாங்கிகிட்டு போன கடன அடைக்கணும்னு நெனைப்பானா.

வருசம் நாலு .

கடன் அனைத்தும் அடைச்சாச்சுன்னு நிம்மதி பெரு மூச்சி விடுவான். அவன் என்ன வேலை பார்க்கிறான் என்பதை அதிகபட்சம் வீட்டில் சொல்ல மாட்டான்.அடுத்து அடுத்து அக்கா தங்கச்சி இருந்தா அதை கரை சேர்ப்பான்....

வருசம் ஆறு...

அவங்க அம்மா சொல்லும் உனக்கு பொண்ணு ஒன்னு வந்தது. ஆன கூர வீடா இருக்குனு வேண்டாம்னு சொல்லிட்டு போய்ட்டாங்கபா, சரிவிடுமா இப்ப என்ன அவசரம்.

அப்பா எங்கம்மா.. அதுக்கு போக்கடம் எங்க இருக்கு இந்த செயராமன்

டீ கடையில தான் உட்கார்ந்து இருக்கும்...சைக்கிள் சத்தம் கேட்குது . வந்துட்டு போல இருக்கு... அதுகிட்ட செத்த பேசிட்டுவை..... இல்லனா ஆயும்  மொவனும்மட்டுமே பேசிக்கிறீயளே என்ன தான் பேசுறியல்னு கேட்கும்...

அப்பாரு சாப்டியா, பார்த்து இருந்துக என ரெண்டே வார்த்தையில் முடித்து கொள்வார்...

இன்னொரு நாள் அப்பா எங்கம்மா என்பான், ஆடு வயிறு தாங்காம ஏழு குட்டி போட்டு இருக்குயா பால் பத்தமாட்டேங்குது, பால் பாட்டிலு வாங்கிகிட்டுவரேன்னு போனுச்சு இன்னும் வரல...

சரி வீட்டு வேலைய ஆரம்பிக்கலாம்னு முடிவு பண்ணி மன போட்டு... வேலைய ஆரம்பித்தாள் வீட்டில் உள்ளவரின் மருத்துவ செலவு வந்து முடக்கி போட்டுவிடும்

இடையில் அக்கா தங்கையின் தலைவரிசை ,ஆடி அழைப்பு , தல புள்ளபிரசவம் ,சம்மந்தி வீட்டு சாவு, கருமாதி என சகலமும் அவன் சங்கை புடிக்கும்,ஆனாலும் அவன் பாரமாக நெனைக்கமாட்டான்.

வருசம் எட்டு

இடையில் அவன் போலீஸில் புடி படாமல் இருக்க வேண்டும் இல்லையேல் அவன் குடும்பத்தில் இடியே விழுந்து விடும். இடையில் வீட்டில் உள்ளவர்களுக்கு ஏதும் நேர்ந்தால் வர முடியாத சூழ்நிலையும் கூட வரும்.

அவன் ஒரு நாள் நல்ல மகிழ்ச்சியான தருணத்தில் இருக்கும்போது ஒரு செய்தி வரும். அவனுக்கு கால்ச்சட்டை மாட்டி ,கஞ்சி வாத்து அவன வளர்த்த அம்மாயியோ அல்லது அப்பாயியோ செத்து போய்ட்டானு. மாட்டு சாணி அள்ளும்போது கூட ஒரு இடுப்பில் அவனையும் இன்னொரு இடுப்பில் சாணி கூடையும் சுமந்து அவன தூக்கி வளர்த்த அவன் ஆத்தா பேரன் நெய்ப்பந்தம் புடிக்க நாச்சும் வந்துடுவானா என்கிற நெனப்புலயே போய் சேர்ந்துடுவா. அவனுக்கு துக்கம் தொண்டையை அடைக்கும், கொல்லி பான ஒடைக்குறதுக்குள்ள ஊர்ல போய் குதிச்சிட மாட்டோமா, அவ சுருக்கும் விழுந்த தோல ஒரு தடவ தொட்டுட மாட்டோமா, வீட்ல உள்ளவங்கள கட்டி புடிச்சி கதறி தீத்துற மாட்டோமா என ஏங்கி சாவுவான் ,ஆனா அவனால முடியாது... அவன் எத்துனை வருசம் கழிச்சு ஊருக்கு வந்தாலும் அவன் வரும்போது வீட்ல போட்டோக்கு மாலை போட்டு அவன் வாசல் வரும்போது கட்டிபுடிச்சி அழுவுவாங்க.... அவன் என்ன பண்ணுவான் பாவம்.. .பத்து வருஷம் முன்னாடி செத்த கிழவிக்கு பதினாறாம் நாள் கூட கொண்டாட முடியாத பாவி அவன்...

புது வீடு கட்டி முடிப்பான் வருசம் பனிரெண்டு...

அவங்க அம்மா சொல்லும், ஐநூறு பத்திரிக்கை போதும்டா தம்பி, மொய் எல்லாம் வாங்க வேண்டாம், கல்யாணத்துல பார்த்துக்கலாம் அவனுக்கு அப்பவும் வரணும்னு ஆசை ஆனா முடியாது ...

பொண்ணும் மாப்பிள்ளையும் போட்டோவை பார்த்தே நிச்சியம் ஆகும் வைகாசில

கல்யாணம் வைச்சிகலாம்னு அவனுக்கு அப்பதான் நரைமுடி எட்டிபார்க்கும் ...

ஒரு வழியா ஊருக்கு வரதுக்கு தயாராவான் .. ரெண்டு மாசம் விடுப்புல தேக்காக்கு போயிட்டு ஊருபயலுவோளுக்கு பத்திரிக்கை கொடுத்துட்டு, வீட்டுக்கு குடுக்குற ஜாமான வாங்கிட்டு, ஆண்டவன் புண்ணியத்தில ஊரு வந்து சேருவான்

அவன் ஊருக்கு வர்ற போறான் என்று தெரிந்ததுமே வீட்டுல யாருக்கும் கையும் ஓடாது, காலும் ஓடாது, அக்கா தங்கச்சி அது புள்ளய, மச்சினன் என எல்லாரும் வந்துடுவாங்க, ஏர்போர்ட்க்கு காரு முன்னரே போய் இருக்கும்....

ஊரு வந்து சேர்ந்து பொட்டி பிரிச்சு மீசக்கார தைலம், கோடாரி தைலம், பச்சை பெல்ட்டு , சென்ட் பாட்டில், ஒடிக்கலம், மார்ட்டின் சட்டை, சிவப்புகோடு போட்ட கைலி, வெளிநாட்டு முட்டாய் என எல்லாத்தையும் எடுத்து கொடுக்கும்போது அவன் பட்ட ரணம் அனைத்தும் ரதம் ஏறி ஓடும்...

அன்னைக்கு ராத்திரி தான் அவன் அப்பன் முழு தூக்கம் தூங்க போரான்ங்குறது.அவனுக்கும் அவன் அப்பனுக்கு மட்டும்தெரிந்த ரகசியம்...

யாருக்கும் துணி மணி  குறை இல்லா எடுத்து குடுத்து ஒரு பைக் வாங்கி நல்லபடியா கல்யாணம் நடத்தி முடிப்பான் ...

ரெண்டு மாசம் முடிந்து அவன் ஊருக்குகிளம்பும் போது அவனும் அவன் மனைவியும் படும் கஷ்டம் எதிரிக்கு கூடவர கூடாது என நினைப்பான் ..

இங்கிலாந்து லெட்டர்ல தான் இல்லறம்நடத்த போறோம் என்பது அவனுக்கு அப்போ தெரிந்து இருக்க வாய்ப்பு இல்ல...

இந்த ரெண்டு மாதத்தில் குழந்தைஉண்டானால் சரி ... இல்லையேல் கேள்வி கேட்பவர்களுக்கு பதில் சொல்லிமாளாது...

அவனுக்கும் ஆசைதான் பாமணி ஆத்து சுக்கான்ல நடக்கனும்னு, சாமி, விஜயா, சாந்தி தியேட்டர்ல படம் பார்த்துட்டு, வீட்டுக்கு சாப்பாடு வாங்கிகிட்டு போகணும்னு, மதுக்கூர் சந்தையில கருவாடு வாங்கணும்னு, காலாற வரப்புல நடக்கும்னு, புள்ள பொண்டாட்டிக்கு அவன் கையாள அழைச்சிட்டு போய் வைத்தியம் பார்க்கணும்னு, நல்லது கெட்டது வாங்கி கொடுக்கணும்னு, அவன் வயலுல நாத்து வீசணும்னு, நடவு ஆளுக்கு டீயும் வடையும் வாங்கி கொடுக்கணும்னு, ஆயி அப்பன வயசான காலத்துல பக்கத்துல இருந்து பார்த்துக்கணும்னு, ஊர்ல கறி விருந்துக்கும் கல்யாணம் காட்சிக்கு போகணும்னு, வெண்ணைத்தாழிக்கு புள்ளையள கூப்டாந்து சாமி காட்டம்னு, ஊரு திருவிழால சாமி தூக்கணும்னு, ஊரு பாலத்து கட்டையில... உட்கார்ந்து அரட்டை

அடிக்கணும்னு, வண்டி மாடு ஓட்டணும்னு,அக்கா புள்ளையளுக்கு மடில வைச்சி காது குத்தணும்னு, புள்ளய மாருல போட்டுக்கிட்டு தூங்கணும்னு... ஆனா முடியல...

கடைசியாக அவனுக்கும் ஆசை அஞ்சாம்நம்பர் கடைல சர்பத்து வாங்கி குடிச்சிட்டு, அரிசி கடை சந்துல மீனு வாங்கிதிங்கணும்னு ஆனா முடியல ....

அவன் மனைவிக்கு பிரசவ வலிய விட அவன் இல்லாத வலி தான் அதிகமா இருக்கும், அவளுக்கும் புள்ள பறந்து கண் முழிக்கும் போது நம் கண் முன்னாள் இருப்பானோ என எண்ணி ஏமாந்து தான் போவாள்...

அவனுக்கு குழந்தையும் பொறக்கும்... யய்யா உனக்கு பொம்பளபுள்ள பொறந்து இருக்குனு போன் வரும் வருத்தத்தோடு

பணம் மட்டுமே அனுப்ப முடியுமே தவிர பாசத்தை பதிவு தபாலில் அனுப்பவழி ஏது.... வருசம் பதினாலு....

அவனுக்கும் அவன் புள்ள தோள் மேல் ஏறாதா என எண்ணி அவன் தோள் ரெண்டும் துவண்டு தான் போகும்...

அவன் புள்ள வயசுல உள்ள ஒரு புள்ளயபார்த்துட்டானா என் புள்ளையும் இப்டிதான இருக்கும்னு அழுதுதான் தீர்ப்பான், அவனை தேத்த நாதி கிடையாது...

முடிந்தால் மூன்று வருடம் கழித்துவருவான், இல்லையேல் அதுவும் இல்லை.... வருசம் பதினேழு...

அப்படி வந்தான் என்றால் அவனுக்கு அதுதான் பொங்க தீவாளி புள்ளயமடியில போட்டுகிட்டு வாங்கிட்டுவந்தத எல்லாம் ஊட்டி விட்டு அழகுபார்ப்பான், ஊர்ல யாரு வீட்ல எல்லாம் துக்கம் நடந்து இருக்கோ அங்கே எல்லாம் போய் துக்கம் விசாரிப்பான், புள்ளய பள்ளிக்கூடம் கொண்டுவிட்டு அழைச்சிகிட்டு வருவான் இருந்தாலும் அதிகம் நெருக்கம் காட்ட மாட்டான், நம்ம இல்லாதப்ப புள்ள ஏங்கி போய்டுமேனு, அவன் பொண்டாட்டிக்கு பொறந்தபலனை அடைஞ்ச ஒரு சந்தோசம்கிடைக்கும் எப்போ தெரியுமா ராத்திரி எல்லாரும் உட்கார்ந்து சாப்பிடுறப்போ...

புள்ளய நல்ல பள்ளி கூடத்தில் சேருன்னு பணம் அனுப்புவான், நடுத்தெரு கந்தன் ஊருக்கு வர்ரான் ஏதாவது வேணுமான்னு கேட்பான், பள்ளிக்கூடத்துல பேக்கு ஒன்னு அனுப்பி விடுங்கனு பதில்வரும்,

இடையில் போனில் பேசும்போது , இங்க ஊரு கோயில் கும்பாபிஷேகத்திற்கு பணம் கேட்டானுவோ ஐயாயிரம் கொடுத்தேன்னு சொல்லுவான்

இன்னம் ஒரு நாள் போன் பண்ணி தைப்பூசம் காவடி எடுக்குறன்னுசொல்லுவான்..

உடனே ஊர்ல வீடு வாசல் எல்லாம் கழுவி விடுவாங்க வருசம் பத்தொன்பது

இன்னொரு நாள் போன் பண்ணுவான் , அவங்க அம்மா சொல்லும் பெரிய அக்கா மொவ வயசுக்கு வந்துட்டாயா, எனக்கு தெரியாது ரெண்டு பவுனு போட்டாலே போடணும்னு என் மாமியா , நாத்தனாருக்கு எல்லாம் பதில் சொல்ல முடியாதுனு மல்லுக்கட்டி புட்டு ஆறு மணி பஸ்ல இப்ப தான்ய போரா...

ஒரு நமட்டு சிரிப்பு சிரிப்பான் அதற்கு அர்த்தம் அவங்க அம்மாக்கு மட்டும் தான் தெரியும் ...

அவன் புள்ளையும் வளர்ந்து நிக்கும் .. பள்ளிக்கூடத்தில் ஆசிரியர் உங்க அப்பா எங்க இருக்காருன்னு கேட்கும் போது எல்லாம் ... எங்க அப்பா சிங்கப்பூரில் இருக்காருன்னு பதில் வரும் வருசம் இருபத்தி ஐந்து.

அவன் மனைவி ஒரு நாள் சொல்லும் பெரிய கோயில் திருவிழா நடக்குது உங்க மொவ பார்க்குறது எல்லாம் கேட்குறா... அவனுக்கு அவன் பள்ளி பருவத்தில் நடந்தது எல்லாம் நினைவில் மட்டும் வந்து போகும்... அவனுக்கு அப்போது வர வேண்டும் என கொள்ள ஆசை ஆனால் முடியாது.....

இதற்கு இடைபட்ட காலத்தில் அவன் மனைவிக்கு அனுப்பிய பணத்தில் சாமர்த்தியமாக ஆறு மா நிலம் வாங்கும் அளவிற்கு பணம் சேர்த்து வைப்பாள், அதை அவள் பேரிலேயே பத்திர பதிவு முடித்து வைப்பான் வருசம் முப்பது...

மனைவிக்கு போன் அடிப்பான் , என்னங்க சீக்கிரம் அடிச்சி இருக்கீய, ஒன்னும் இல்ல இங்க சீனன் பண்டிகை நடக்குது அதான் சீக்கிரம் வந்துட்டேன் புள்ள பள்ளிக்கூடம் போய்ட்டாளா, வயலுல என்ன வேலை நடக்குது, இன்னைக்கு தான் மாமா வெற விட்டுட்டு வந்து இருக்காரு, மானம் வேர மொரட்டுது ரெண்டு நாளைக்கு மழை இல்லமா இருந்தா போதும் இல்லனா வெறய பிரட்டி புடும் என்பாள்.....

இருந்த கடன் எல்லாத்தையும் அடைத்து கொஞ்சம் காசோட, தலையில் முடி இழந்து வீடு வந்து சேருவான்...அவன் தோளில் கிடக்கும் தேங்காப்பூ துண்டும், கழுத்தில் கிடைக்கும் ரெண்டு பவுனு சங்கிலியும், வால்கெர் செருப்பும், மொட்டை அடித்த தலையும், வாங்கிய ரோத்தா அடியும் மட்டுமே அவனுக்கு மிச்சம் வருசம் முப்பத்தி ரெண்டு, வயசு நாற்பத்தி ஐந்து...

மீதம் உள்ள காசில் இன்னம் கொஞ்சம் நிலம் வாங்கி வீடு உண்டு வயல் உண்டு என

அவன் காலம் கடத்துவான்...

அவன் வாழ்க்கை எப்போது நிறைவு பெரும் தெரியுமா....

காலைல ஐந்து மணிக்கு எழுந்தரிச்சு,அதே செயராமன் டீ கடைல டீ குடிச்சு (அந்த செயராமன் இப்போ செத்து போய் இருப்பாரு, அவரோட புள்ள அந்த டீ கடைய இப்போ நடத்திக்கிட்டு இருப்பாரு.

ஆனாலும் இன்னும் மூணு தலைமுறைக்கு அது செயராமன் கடைதான்) வயலை பார்த்துட்டு, வீட்டுக்கு வந்து ஊறுகா மொலவாவோட கஞ்சிய குடிச்சிட்டு சாப்பாட்டுக்கு ஏதாவது வாங்கி குடுத்துட்டு, புள்ளய பஸ்சுக்கு மெயின் ரோட்ல கொண்ட விட்டுட்டு, வீட்டு வேலை ஏதாவது இருந்தா பார்த்துட்டு, மதியான சாப்பாடு முடிச்சிட்டு ஒரு சின்ன தூக்கம் தூங்கிட்டு, மூணு மணிக்கு வண்டிய எடுத்து டௌனு குள்ள வந்தானா மாட்டுக்கு கயிறு வாங்கிகிட்டு, உரம் கொஞ்சம் வாங்கிகிட்டு, புள்ளையளுக்கு திங்க ஏதாவது வாங்கிகிட்டு, அவங்க அம்மாக்கு தென்னைமரகுடி எண்ணெய் வாங்கிகிட்டு, மளிகை சாமான் வாங்கிகிட்டு வண்டிக்கு எண்ணெய் போட்டுக்கிட்டு, பள்ளிக்கூடம் போன புள்ளய வண்டில அழைச்சுக்கிட்டு வீடு போய் சேர்ந்து, ஊரு முச்சந்தியில் கொஞ்சம் நேரம் ஊரு கதை பேசி, ராத்திரி ஒன்னா உட்கார்ந்து சாப்பிட்டுட்டு, புள்ள ரேங்கு கார்டு வாங்கி பார்த்துட்டு என்னடி புள்ள வளர்த்து வைச்சி இருக்க பத்தாவது ரேங்கு வாங்கி இருக்கானு கேட்பான் பாரு...

இவ்வளவையும் கடந்து வந்து ரா படுத்தாலும் பகல் படுத்தாலும் அவன் நினைப்பில் ஒன்னே ஒன்னு ஓடிக்கிட்டே இருக்கும் ‘‘ நான் பட்ட கஷ்டத்த என் புள்ளய பட்டுர கூடாது‘‘



- தினேஷ் குமார் மாரியப்பன்
டெல்டாகாரன்

# வர்ணம்

கிராமியம் வீற்றிடும் சோலைவன பூக்களாம், வண்ணத்தில் வர்ணத்தின் காதலை கொண்டதுவாய்

பழித்திடும் கலியுக புத்திரனை சாடுவதாய் குலம் கூடா குளம் கூட்டும் இந்திர தேசத்தியவர்கள் சிவப்பு வண்ண காகிதமொன்று வெளிச்ச மறைவாய்

மூவர்ண பொதுவுடைமையில் தீண்டாதொரு மறைவுடைமை

சத்ரியனின் வாள் வீசும் பொன் நொடி கண்டதுவே தொழில் பழக்க மாற்றமே இங்கு கேடுக்கெட்டு தெரியுது

ஆற்றின் வேகத்தில் பச்சிளத்தின் கூக்குரல் கண்டதும் மரபினர் தேவை கடந்து வேற்றவரின் உடைமை கொள்ளுது

தேநீரின் இரவலில் தொட்டும் படா உயர்ந்தவராம் முன்னோரின் புனையினை வீரம் பாட்டும் வளர்ப்பில் அன்பினுள் சேர்ந்தே புகுத்திடும் சாராம்சம்

தவறென் றறியா பாலைவன மலர் மொட்டுகள் இருந்தும் இல்லா கட்டமைப்பு சாஸ்திரங்கள் உடைந்ததாய் காட்சி தரும் வேற்றுலுக மேதைகள்

விதைப்பின் மூலமே எதிர்வரும் நடப்புகளை காத்திடும் என்றுமே இடைமறையருக்கும் நம்மின் யுக்தியே.



- த.வா.அஜய்பிரசாத்

# வேண்டும் ‘‘உயர்’’ நீதிமன்றங்கள்

‘‘அட எங்கப்பா இப்போ இருக்க நிலமைல நீ வீட்டு கேஸ்லாம் ஜெயிக்கிறது ? 10 வருசம் 20 வருசம் இழுக்கும் பா..!?’’

‘‘இந்தியாவுல ஒரு குத்தம் பண்ணா அதுக்கு தீர்ப்பு வரதுக்குள்ள அவனே வயசாகி செத்துடுவான்பா...’’

இவை அனைத்தும் எப்போதாவது நாம் கடந்து போகும் சாதாரண வார்த்தைகள் மட்டும் அல்ல உண்மையும் கூட!

இந்தியா முழுவதும் உள்ள நீதிமன்றங்களில் 2010ன் கணக்கின் படி நிலுவையில் உள்ள வழக்குகள் மட்டும் சுமார் 3 கோடி. இதில் 2014ம் ஆண்டு நிலவரப்படி தமிழகத்தில் 14,63,569 வழக்குகள் நிலுவையில் உள்ளதாக புள்ளி விபரங்கள் தெரிவிக்கின்றன.

இதில் கொலை, கொள்ளை, சிறுவர் சிறுமியர், பெண்கள் வல்லுணர்வு, அரசியல் வழக்குகள் ஏராளம்.

‘‘தாமதப்பட்ட நீதி மறுக்கப்பட்ட நீதி’’ என்ற முதுமொழி உண்டு, தாமதமாக வரும் வெற்றி மனிதனை அந்த அளவிற்கு கொண்டாட வைக்காது.

அது போல தாமதமாக வரும் நீதி எந்த வித பாதிப்பையும் ஏற்படுத்த போவதில்லை என்பதே நிதர்சனம் .

இது ஒரு புறம் இருக்க அரசியல் வழக்குகள் அதாவது தமிழகத்தை மட்டும் எடுத்துக்கொண்டால் 178 சட்ட மன்ற நாடாளுமன்ற உறுப்பினர்கள் மீது குற்ற வழக்கு விசாரணைகள் நிலுவையில் உள்ளன.

உத்திர பிரதேசத்திற்கு அடுத்தபடியாக மக்கள் பிரதிநிதிகள் மீது குற்ற வழக்குகள் அதிகம் இருப்பது தமிழகத்தில் தான்.

உத்திரபிரதேசத்தில் 324 பேர் மீது குற்ற வழக்குகள் உள்ளன.

குற்ற பின்னணி உள்ளவர்கள் தேர்தலில் போட்டி இடுவதை தடுக்க உச்ச நீதிமன்றம் உறுதியாக இருக்கிறது.

குற்ற பின்னணியில் தண்டிக்கப்பட்ட பிரதிநிதிகள் உடனடியாக தகுதியிழப்பை

பாதுகாக்கும் சட்ட பாதுகாப்பை நீக்கி 2013ல் உச்ச நீதிமன்றம் தீர்ப்பு அளித்தது.

மேலும் மக்கள் பிரதிநிதிகள் மீதான வழக்கு விசாரணைகள் ஓராண்டு காலத்துக்குள் முடிக்க வேண்டும் எனவும் 2014ல் உத்தரவு பிறப்பித்தது.

நீதித்துறையின் உட் கட்டமைப்பில் இருக்கும் போதாமையை பயன்படுத்தியும் , அரசியல் செல்வாக்கை பயன்படுத்தியும் தங்கள் மீதான விசாரணைகளை முடிக்க விடமால் காலத்தை நீட்டிக்கிறார்கள்.

இதற்கு உதாரணமாக தமிழக அரசியல் தலைவரின் வழக்கு ஒரு சாட்சி, 1991-96ல் காலகட்டத்தில், 1996ல் தொடரப்பட்ட வழக்கு 2014 பிப்ரவரில் முடிந்தது என்றால் பார்த்துக்கொள்ளுங்கள்.

இதற்கிடையில் அவர் தேர்தலில் நின்று வெற்றி பெற்று முதல்வர் பதவியும் வகித்து விட்டார்.

இறுதியாக சில வார்த்தைகள்
''தண்டனைகள் கடுமையானால் தவறுகள் குறையும்'' என்பது வேறு,

முதலில் தண்டனைகள் கடுமையாகவும் , தவறுகள் குறையவும் இங்கு பெருமளவில் நீதி மன்றங்கள் அதிக அளவில் உருவாக்கிட வழிவகை செய்ய வேண்டும்.

சாமானியன் முதல் பிரதமர் வரை சட்டம் சமம், நீதி சமம் என்பது நீதிமன்றங்கள் பெருகும்போதே வெளிப்படும் என்பதில் எள்ளளவும் ஐயம் இல்லை.

( தரவுகள்: மவிக்கிப்பீடியா, தமிழ் இந்து, தினமணி )

--

**பாலாஜி கலைச்செல்வன்**

# வெற்றி மாலை..!

வெற்றி என்பது வெல்லக்கூடியது.
வெல்ல நினைத்தால்,வென்றிடலாம்!
சூழ்நிலை எப்படி
இருந்தால் என்ன?
சாதிக்க நினைத்தால்,
சாதிக்கலாம்..!

துணிந்து முட்டி மோதி பார்த்தால்,
மலையைக் கூட தகர்த்திடலாம்!
வானமே எல்லை,
என்றெழுந்தால்..
உயரே உயரே சென்றிடலாம்..!

கற்ற கல்வியை
கருவியாக்கு.
கல்லும் கூட
சிலையாகும்..!

பெற்ற வாய்ப்பினை,
பெருமையாய் போற்றிடு.
தரணியில் நீயும்
உயர்ந்திடலாம்..!

இன்று எனக்கு,
நாளை உனக்கு.
இதுவே இங்கு நிச கணக்கு.
உன்னை நம்பு..!
உனக்குள் நம்பு..!
விடியல் தூரம் தொலைவில்லை..!

வெளிச்சம் இங்கு இருக்கும்
வரைதான்...
உன் நிழலும் கூட துணைக்கு வரும்..!
மனதில் இருட்டு சூழ்ந்து விட்டால்
வாழ்க்கை இங்கு வெறுப்பாகும்..!

துணிந்து வாழ மோதி பார்ப்போம்.
உளியைக்கொண்டு சிலைகள்
வடிப்போம்.
கடலுக்குள் மூழ்கி
முத்தெடுப்போம்...!
கடலைக் கூட கடந்து பார்ப்போம்...!

உனக்குள் இருக்கும் எண்ண கனவை
அக்னிக் குஞ்சாய் பறக்கவிடு...!
உனது திறமையை
உலகறிய,
உழைத்து நீயும் சொல்லிவிடு...!

பயந்துக் கொண்டே
பணிகள் செய்தால்,
நிழலும் கூட பயமாகும்.!
நம்பிக்கை கொண்டு
நீ நடந்தால்,
நாட்டிற்கு உன் சொல் வழிகாட்டும்..!

சிறிது சிறிதாய் முயற்சிகள் செய்த
சிறிய வாழ்க்கை போதுமடா...!
வீறு கொண்டு விரைந்து நடந்தால்,
வெற்றியின் மாலை நிச்சயமடா...!



முனைவர். சா.சம்பத்
மன்னார்குடி

# இன்றைய இளைஞர்கள்


அருள்பாண்டியன்

ஆட்டம் பாட்டம் கேளிக்கை
என்றொரு கூட்டம்,

ஓட்டம் போராட்டம் முன்னேற்றம்
என்றொரு கூட்டம்,

விடியல் வருமென
காத்திருந்த கூட்டம்,

விதைத்தால் தான் வருமென
புறப்பட்ட கூட்டம்,

வீதியில் இறங்கி
போராடும் கூட்டம்,

மதுவில் மயங்கி
மதி கெட்ட கூட்டம்!

படித்து படித்து வாங்கிய பட்டம்
வாய்ப்புக்கு காத்திருக்கு
வளமான கூட்டம்!

பாழ்பட்டு போனது
துரோகிகள் கூட்டம்,

இன்னும் பல கூட்டம் இப்படியும் அப்படியும்
திசை மாறிப்போக
திக்கற்று நிற்கிறது,
நாளைய கூட்டம்!

நாளைய இந்தியா இளைஞர்கள் கையில் கலாம் சொன்னது,
நாள் தோறும் பிறக்குது இந்தியா! மோடி சொன்னது!

கட்டுரை பற்றிய சந்தேகங்களுக்கு
அருள்பாண்டியன்
மின்னஞ்சல்: pandiana849@gmail.com
கைப்பேசி: 8973204042
பூவனூர்

# ஆதலால் காதல் செய்வோம்!!!



திவ்யா வசந்தன்

‘‘காதல்‘‘ இந்த மூன்று எழுத்து வார்த்தையை வாழ்வில் கடந்து வராதவர்கள் இல்லை. காதல் என்பது இரு பாலினத்திற்கும் இடையே ஏற்படும் ஒரு உணர்வு மட்டுமே என்று இன்று நம்மில் பலர் புரிந்துக் கொண்டுள்ளோம். இது முற்றிலும் தவறான கருத்து என்பதே உண்மை. காதல் ஒரு பெண்ணிற்கு ஆண் மீதோ, இல்லை ஆணிற்கு பெண் மீதோ ஏற்படுவது மட்டும் இல்லை. ஒரு பொருளின் மீது, அல்லது இசையின் மீது, அல்லது ஒரு விலங்கின் மீது, அல்லது ஒரு பறவை மீது கூட ஏற்படலாம். இப்படி அனைத்திலும் காதல் இருக்கிறது.

காதல் என்பது நிலையற்றது. ஏனெனில் சிறுவயதில் நமக்கு ஒரு பொருளின் மீது காதல் ஏற்பட்டிருக்கும். அந்த பொருளை நாம் பத்திரமாக பாதுகாத்து வைத்திருப்போம். அதை பார்க்கும் போதெல்லாம் மகிழ்ச்சி ஏற்பட்டிருக்கும், அதே நாம் வளர்ந்த பின்னர் வேறு ஒரு பொருள் மீது நாட்டம் ஏற்பட்டிருக்கும், காதல் ஏற்படும். இப்படி நம் பருவத்துக்கேற்ப நம் மனநிலை மாற்றத்துக்கு ஏற்ப காதல் ஏற்படும். எனவே காதல் என்பது வளர்ந்த ஒரு ஆண் பெண் இடையே மட்டுமே வரும் என்பதல்ல என்று நாம் புரிந்துக் கொள்ள வேண்டும் .

காதல் என்றால் என்ன ? இவ்வுலகில் வாழும் அனைத்து உயிர்களுக்கும் தேவையான ஒன்று ‘‘அன்பு‘‘. எங்கே அன்பு, பாசம், மகிழ்ச்சி, நிறைவு கிடைக்கிறதோ அங்கேயே காதல் ஏற்படும் .இப்படி இவை அனைத்தும் ஒரு மனிதனுக்கு மனிதனிடம் மட்டுமே கிடைக்கும் என்பது இல்லை. காதலுக்கு எந்த ஒரு வெளிப்பாடும் இல்லை. காதலை நம் மனதால் உணர வேண்டும். எனவே காதலை புரிய வைப்பதை விட உணர வைப்பதே சிறந்தது.

நம் அன்றாட வாழ்வில் நடக்கும் அனைத்தையும் காதல் செய்யுங்கள். உங்கள் தொழிலை காதலோடு செய்யுங்கள். கண்டிப்பாக மனநிறைவை தரும் .உண்ணும் உணவை காதலியுங்கள்,மிகவும் ருசியாக தெரியும். உடுத்தும் உடையை காதலியுங்கள், உங்களை அழகாக காட்டும். ஏன் நீங்கள் செல்லும் வாகனத்தை காதலித்து பாருங்கள், உங்கள் தொலைதூர பயணம் கூட இலகுவாக தொடரும். இவற்றையெல்லாம் நீங்கள் காதலிக்க வேண்டும் என்றால் முதலில் உங்களை நீங்கள் காதலிக்க வேண்டும். சிலர் அவர்களின் தோற்றத்தை நினைத்து வருத்தம் கொள்வார்கள். சிலர் சிகப்பாக இல்லை என்றும் சிலர் ஒல்லியாக இல்லை என்றும் சிலர் உயரமாக இல்லை என்றும் இப்படி யோசிப்பதை விட்டு உங்களை நீங்கள் காதலித்து பாருங்களேன். பிறகு நீங்கள் கண்ணாடியை பார்க்கும் போது நீங்கள் எவ்வோ அழகு என்பது புரியும். இப்படி காதல் என்பது நம்பிக்கையையும் ,நல்ல எண்ணத்தையும் தரும். எனவே அனைத்தையும் காதலியுங்கள் !!!..

காதலோடு வாழுங்கள் !!! வாழ்க்கை இனிக்கும் !!! வாழ பிடிக்கும்.

# மழை வரப்போகிறது. அதை எங்கே தேக்குவது?

ஆற்றில் நீர் வந்தபோது அதை ஏன் ஏரி குளங்களில் தேக்க முடியவில்லை? நீர் செல்லும் வழித்தடங்கள் எங்கே?

தனிச்சொத்தில் (நமது நிலத்தில்) யாராவது ஆக்கிரமிப்பு செய்தால் அரிவாள், கம்பு, சுளுக்கினு எடுத்துக்கொண்டு சண்டைக்கு நின்ற நாம்,

பொதுச்சொத்தில் ஆக்கிரமிப்பு செய்யும் போது வாய்மூடி மௌனமாய் இருக்கிறோம்!

அனைத்து விளை நிலங்களுக்கும் வாய்கால், வடிகால் என இரண்டு கண்கள் இருந்தது. இரண்டையும் தூற்றோம், விற்றோம்.

வாய்கால் இல்லை,
வடிகால் இல்லை,
நீர் வழித்தடம் இல்லை,
ஏரி இல்லை,
குளம் இல்லை,

மழை வரப்போகிறது. அதை எங்கே தேக்குவது?

--
நிரஞ்சன்



# முண்டாசு கவிஞனுக்கு

வார்த்தையினில் வளரி கொண்டு
போராடிய சுதந்திர போராட்ட
மாவீரன்...

தமிழ்மொழிக்கோர் உண்மை காவலன்
யாரெனில் என் நா உரைப்பது உன்
பெயரையே...

எவர் முன்பும் மண்டியிடாத மாவீரம்,
தமிழ் மொழிக்கு மட்டுமே தலை
வணங்கும் கர்வம்.

தமிழ் உலகின் மூத்த மொழி என்பதில்
பெருமை கொள்ளும் நான்,
எம் தமிழை உலகுக்கு எடுத்துக்
காட்டிய உம்மை வணங்குவதில்
பெருமிதம் கொள்கின்றேன்.

தமிழாலும் தமிழுக்காகவும் வாழ்ந்த நீ
எம் தமிழ் மொழியின் மூத்த பிள்ளை
ஆவாய்,
புகழறியா ஒரு சில மூடர்கள் இடையே
முண்டாசுக் கவிஞனாய் எம்
தமிழ்மொழி காத்தாய்.

பூணூல் மட்டும் பூண்டு தன் சாதியை
காக்க எண்ணாமல்,
சாதியை மறுத்து சமூகத்திற்காக
போராடிய ஒப்பற்ற உன்னதமானவனன்
நீ..

பெண் என்றால் ஆணுக்கு
பின்னால்தான் என்ற காலகட்டத்தில்,
ஆணும் பெண்ணும் சமம் என தன்
மனைவி கரம் பிடித்து வீதியில்
நடந்தாய்...

ஆண் எனும் ஆணவம் உடைத்தாய்...
உன் வார்த்தையினால் பல
கோழைகளை வீரமுற செய்தாய்..
பல தமிழ் மொழி வீரர்களை
கண்டாய்...

ஆங்கிலேயர்களையும்
பரங்கியர்களையும் படை நடுங்க
செய்தாய் மொழி என்ற ஒற்றை
ஆயுதத்தால்...

உலகில் சிறந்து விளங்கும் தமிழுக்கு
உண்மை காவலன் நீ என்றால்,

உன் மீதும் எம் தமிழ் மீதும் பற்று
கொண்ட உண்மை காதலனாய் நான்....

மண்ணில் நான் மாண்டு போகும் வரை
பேசுவேன் என் தமிழ் தாயின் உரை வீர
உரை...



எழுத்துரு எண்ணம்
**பா.மாதவன்,**
இராசமன்னார்குடி

**பிழைகள் இருக்கலாம் அதில் உங்கள்**
**பிள்ளைகளாகிய நாங்கள் இருப்போம்**

# திறவுகோல்

விலை மதிப்பில்லாத தங்கள் நேரத்தை ஒதுக்கி இந்த இதழை படித்த அனைவருக்கும் எங்கள் அணியின் சார்பில் நன்றியை உரித்தாக்குகிறோம்.

மன்னார்குடியில் இருந்து வெளியிடப்படும் முதல் மாத இதழ் இது. உள்ளூரில் இருக்கும் படைப்பாளிகளை அடையாளம் கண்டு அவர்களின் படைப்புகளை வெளி உலகிற்கு கொண்டு வரும் வண்ணத்தில் துவங்கிய மாத இதழ்.

நீங்கள் படித்த கட்டுரைகளில் ஏதும் பிழைகள் அல்லது முரண்பாடுகள் இருப்பின் உங்கள் விமர்சனங்களை முன் வையுங்கள். எதிர்காலத்தில் அதை கருத்தில் கொண்டு இன்னும் வலுவாக செயல்படுத்துவதற்கான முயற்சிகளை மேற்கொள்கிறோம்.

---

நீங்கள் உங்கள் விமர்சனங்களை அனுப்ப
மின்னஞ்சல்: thiravukolfdbk@gmail.com
பகிரி: +91 8220567322

---

மன்னார்குடி படைப்பாளர்கள் தங்களின் படைப்புகள் சிறுகதை, கட்டுரை, கவிதை, ஓவியம் என எங்கள் இதழில் இடம் பெற செய்ய
மின்னஞ்சல்: thiravukolsubmit@gmail.com
பகிரி: +91 8220567322

---

தொடர்ந்து பகிரி வழியில் தங்கள் கைப்பேசிக்கே மின்னிதழை பெற
பகிரி: +91 8220567322

---

இணையம் மூலம் தரவிறக்கம் செய்ய
http://maintharkal.mannai.in

---

அடுத்த இதழில் இன்னும் சிறப்பான படைப்புகளுடன் உங்களை சந்திக்கிறோம்.

கி. மாணிக்கம்
திறவுகோல் ஆசிரியர் குழு

## 2015ம் ஆண்டு முதல்
## மன்னையின் மைந்தர்கள் குழுவின் பணிகள் ....

காவிரி, உரிமை மீட்பு குழுவின் பனங்குடி, இந்திய அரசின் பெட்ரோலிய ஆலை முற்றுகை போராட்டத்தில் மன்னையின் மைந்தர்கள் பிற போராட்ட குழுவுடன்

சீமை கருவேல மரம் அழிப்பு மன்னை தொடர்வண்டி நிலையம் அருகில்

இரத்த தான முகாம்

கடலூர் வெள்ள நிவாரண பணிகள்

பூமியை காப்போம் கருத்தரங்கம் (தேசிய மேல்நிலைப் பள்ளி - மன்னார்குடி)

நம்மாழ்வார் பூங்கா அமைத்தல் (தொடர் வண்டி நிலையம் அருகில் )

நெகிழி அழிப்பிற்கான விழிப்புணர்வு

தோழர் கு. முத்துகுமார் 7ம் ஆண்டு நினைவு நாள்

உயர்திரு. சகாயம் (இ.ஆ.ப.) அவர்கள் பங்குபெற்ற நமது வாக்கு! நமது உரிமை!! தேர்தல் கருத்தரங்கம்

தொடர்வண்டி நிலைய கருவேல மரம் அகற்றல் மற்றும் சமநிலைப்படுத்துதல்

உலக சுற்றுசூழல் தின அன்று தொடர்வண்டி நிலையத்தில் இருக்கும் கருவை மரங்களை அகற்றும் பணி நடைபெற்றது

ஜி. ஆர். தோப்பு சீமை கருவேல மரங்கள் அழிப்பு

மாணாக்கர்களுக்கு கையேடு, எழுதுகோல் வழங்கிய மன்னையின் மைந்தர்கள் குழு

<u>நம்மாழ்வார் ஏரியில் நடைபெற்ற பணிகள்</u>
சீமை கருவேல மரங்கள் அழிப்பிற்கு பின் தூர்வாரி மீட்டெடுத்தல்
பழைய சுவர்களில் வெள்ளையடித்தல்
நிலத்தடி நீர் அதிகரிக்க வேண்டி செய்த பணி
குழாய் பதிக்கும் பணி
விதை விதைப்பு, மரக்கன்றுகள் நடப்பு

திறவுகோல் மின்னிதழ் வெளியீடு

மன்னையின் மைந்தர்கள்
மண்ணின் மாற்றத்தை நோக்கி

## எங்களுடன் இணைந்து செயல்பட விரும்புவர்கள் தொடர்பு கொள்ளுங்கள்

**+91 8220567322**

http://maintharkal.mannai.in

MannaiyinMaintharkal மன்னையின் மைந்தர்கள்